விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25

ஒலி 083 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 28 திங்கட்கிழமை (11.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



### அடித்து விரட்டப்பட வேண்டியவரே கோட்டா

# சரணடைய வந்தவர்களை கொல்ல உத்தரவிட்டவர்

## விக்னேஸ்வரன் எம்.பி காட்டம்



(யாழ்ப்பாணம்)

வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்களை சுட்டுக்கொல்ல உத்தரவிட்ட கோட்டாபய அடித்து துரத்த வேண்டிய துஷ்டன் ஆவார் என விக்னேஸ்வரன் எம்.பி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கில் இன்று

## அதிக வெப்பம் நிலவலாம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் இன்று அதிகளவான வெப்பநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் 15

## சரசாலையில் கசிப்புடன்

### 15 வயதுச் சிறுவன் கைது


(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சரசாலை பகுதியில் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் கசிப்புடன் நேற்று 15 வயதுடைய சிறுவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் 02

### ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று

## ஐ.எம்.எப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் சம்பந்தன் பங்கேற்பு



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுமாறு எதிர்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி, தமிழ்த் தேசியக் கூட்டமைப் 15

## பழைய விடயங்களை மறந்து எம்முடன் இணையுங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



(குருநாகல்)

பழைய விடயங்களை மறந்து ஐக்கிய மக்கள் சக்தியினர் எம்முடன் இணைந்து கொள்ள முன்வர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

## வெடுக்குநாறிமலை தாக்குதலைக் கண்டித்து

### நல்லூரில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா வெடுக்குநாறி மலையில் தமிழர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

நல்லை ஆதீன முன்றலில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் 15


### யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில்

## படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக பாதுகாப்பு தரப்பினரது கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் ஒரு தொகுதி காணி நிலங்கள் உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 15



## மதத்தின் பெயரால் மனிதம் இறந்துவிடக்கூடாது



### வெடுக்குநாறி சம்பவம் தொடர்பில் மன்னார் இந்துமத பீடத் தலைவர்

(மன்னார்)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று சைவ சமய மக்களின் வழிபாட்டு உரிமைகள் 02

## நிமோனியா காய்ச்சலால் இளைஞன் உயிரிழப்பு

### கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

நிமோனியாக் காய்ச்சலால் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துன்னாலை வடக்கு கரவெட்டியில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த முத்துலிங்கம் சிவதர்ஷன் (வயது-29) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

வாய் அவிச்சல் ஏற்பட்டதன் காரண 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெடுக்குநாறிமலையில் தமிழர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா வெடுக்குநாறி மலையிலே பாரிய அநீதி தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ளதுடன் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்கின்ற தலைவர்களினால் தமிழ் மக்களுடைய மதஸ்தலங்களை அழிக்கும் செயற்பாடு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வெடுக்குநாறி மலையில் பொலிஸ் அராஜகம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வந்து கொண்டிருக்கும் நிலையில் இன்று அரசாங்கம் இவ்வாறான பிரச்சினைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை ஏன் மக்களுடைய ஏனைய பிரச்சினைகளுக்கு அரசாங்கம் கொடுக்கவில்லை.

இதிலும் குறிப்பாக ஜனாதிபதி எங்களை சந்திக்கின்றார். சந்திக்கும்போது தொல்பொருட்கள் சார்ந்த பிரச்சினைகளை நாம் முன்வைக்கும் போது அதை உடனடியாக நிவர்த்தி செய்வேன் என கூறுகின்றார்.

ஆனால், ஜனாதிபதி இது வரைக்கும் எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வினை தர தவறியிருக்கின்றார். இந்தச் செயற்பாடுகளை பார்க்கும் போது ஜனாதிபதிக்கு ஆதரவாக செயற்படுகின்ற தமிழ் தேசிய தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்துடன் இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வெட்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# ரணிலுடன் கிரிக்கெட் பார்த்த சுமந்திரன்



(கொழும்பு) கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற றோயல் மற்றும் தோமியன் கல்லூரிகளுக்கு இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அவருடன் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,10)

# வரி செலுத்தாத சுமார் 1,000 நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

சுமார் 1,000 நிறுவனங்கள், அடுத்த ஆறு மாதங்களில் 160 பில்லியனுக்கும் அதிகமான வரி பாக்கிகளை செலுத்துமாறும், அல்லது வங்கிக் கணக்குகள் முடக்கப்படும், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது.

இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் செபலிகா சந்திரசேகர இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதி வரை நிலுவைத் தொகை நிலுவையில் இருந்ததாகவும், எந்த நீடிப்பும் இல்லாமல் ஆறு மாதங்களில் நிலுவைத் தொகையை செலுத்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சில நிறுவனங்கள் பதிலளித்து தங்கள் சொத்துக்களை பறிமுதல் செய்ய ஒப்புக்கொண்டதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

வரி செலுத்துவதில் தவறிழைத்த நிறுவனங்கள் நிலுவைத் தொகையை மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க, திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம-7,10)

### சுண்டிக்குளம் கடற் பகுதியில்

# சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்ட 9 பேர் கைது

(யாழ்ப்பாணம்) யாழ். சுண்டிக்குளம் சாலை கடற்பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்ட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையின் போது, சட்டவிரோத நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட 5 டிங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கடற்றொழில் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையினர் தீவைச் சுற்றியுள்ள கரையோர மற்றும் கடற்பரப்புகளில் வழக்கமான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

அதற்கமைய, கைது செய்யப்பட்டவர்கள் 19 முதல் 45 வயதுக்குட்பட்ட முல்லைத்தீவு, வெள்ளன்பாலம் மற்றும் புதுமாத்தளன் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொருட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7,10)

## சரசாலை...

கசிப்பை எடுத்து சென்றபோது சாவகச்சேரி பொலிஸால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் சிறுவன் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளாதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 02 . 03 . 1945

மறைவு 11 . 02 . 2024

கடந்த 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் வேலுப்பிள்ளை பரராஜசிங்கம்

அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும், தொலைபேசி மற்றும் அனைத்து வழிகளிலும் அனுதாபங்களைத் தெரிவித்தும் எம் துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.03.2024 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(C-8511)

" கலா காடின்"
335/7, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## மதத்தின்...

புனித தன்மைகள் மீறப்பட்டமையினை வன்மையாக கண்டித்துள்ளதோடு, மதத்தின் பெயரால் மனிதம் இறந்து விடக் கூடாது என மன்னார் இந்து மத பீடத்தின் தலைவர் சிவஸ்ரீ மகா தர்மகுமாரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆலயத்தில் சைவ சமய மக்களின் வழிபாட்டு உரிமைகள் புனித தன்மைகள் மீறப்பட்டமை தொடர்பில் நேற்று தர்மகுமாரக் குருக்கள் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும், வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் கோவில் மகா சிவராத்திரி பூசையின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டுமொத்த இந்து சமூகத்தையும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாக சைவ சமய விழுமியங்களை, புனித சடங்குகளை அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

சைவ சமயத்தின் புனிதத் தன்மையினை சீரழிக்கும் இந்த செயல்கள் மிகப் பாரதூரமானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

சொர்க்கம் திருமண சேவை

- 1989 இல் பிறந்த செவ்வாய்க்குற்றமுள்ள வைத்தியர் மணமகனுக்கு வைத்தியர் மணமகளை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- லண்டனில் வசிக்கும் 22 வயது மணமகனுக்கு லண்டன் Or கனடாவில் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
- 1991 இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ள சொர்க்கம் திருமண சேவை
001 416 666 1855 (கனடா)
077 887 6969, 077 650 5097
(யாழ்ப்பாணம்)
(031)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
உற்சாகம்
புத்துணர்ச்சி
ஆரோக்கியம்




(C-8507)

Packed By:
ROYAL INDUSTRIES®
COLOMBO - 12
076 668 8025

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி : 021 222 2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவினால்

# தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வு வழங்கப்படும்

## வெடுக்குநாறி மலை விவகாரம் குறித்து சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன்

(கொழும்பு)

**சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் பொலிஸாரால் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டு சிலர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட பலர் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிவராத்திரி தினத்தன்று நீதிமன்ற அனுமதியுடன் பூஜை வழிபாடுகளில் ஈடுபடச் சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் இரவு வேளையில் அங்கு வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.


இச்சம்பவம் தொடர்பில் பலர் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இங்கு வழிபாட்டில் ஈடுபடும் மக்கள் எதற்காக பொலிஸாரால் வெளியேற்றப்படுகின்றார்கள்? எதற்காக கைதுசெய்யப்படுகின்றார்கள்? அவர்களது மத உரிமை எதற்காக மீறப்படுகின்றது? இவ்வாறானதொரு சூழ்நிலையில் புதிதாக ஸ்தாபிக்கப்படும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று எவ்வாறு கூறமுடியும்? என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மனித



உரிமைகள் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

### வாசனைப் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி



(கொழும்பு)

மீள் ஏற்றுமதிக்காக மிளகு, இஞ்சி, மஞ்சள் உள்ளிட்ட வாசனைப் பொருட்களை இற க்குமதி செய்வதற்கு அனுமதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு விதிமுறைகளின் கீழ் அது தொடர்பான இறக்குமதி உரிமங்களை வழங்க அமைச்சரவை வழங்கிய தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அமிளகு, சாதிக்காய், ஏலக்காய், இஞ்சி, மஞ்சள் மற்றும் பிற மசாலாப் பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு இயக்குநரின் ஒப்புதலுக்கு உட்பட்டு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. (நி)

# பொலிஸாரின் அடாவடியை கண்டித்து போராட்டம்

(மட்டக்களப்பு)



வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனத்தை கண்டித்து மட்டக்களப்பில் நேற்று கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளின் போது ஆலயத்திற்குள் நுழைந்த பொலிஸார் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரை கைது செய்ததுடன் மேலும் கடும் அடக்குமுறையினை பிரயோகித்திருந்தனர்.

இதனை கண்டிக்கும் முகமாகவே மட்டக்களப்பில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் தமிழ் பாட ஆசிரியரான
திருமதி.விஜி ஆனந்தநடராஜன்
அவர்களின்
அன்புத் தந்தையார்



**அமரர்.சின்னத்தம்பி விநாயகமூர்த்தி**

அவர்கள் 08.03.2024
(வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-8506)

**கல்லூரி சமூகம், யாழ். இந்து மகளிர் கல்லூரி.**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13.03.1957 | | 03.03.2024 |



## அமரர். எட்வேட் எட்வீசம்மா (கிளி)

புனித செபஸ்ரியார் வீதி கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனி PFORZHEIM எனும் இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.எட்வேட் எட்வீசம்மா (கிளி) கடந்த 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னப்பு-பிரகாசம்மாவின் அன்பு மகளும் எட்வேட்டின் அன்பு மனைவியும் காலம் சென்றவர்களான சொலமன் செசீலியாவின் அன்பு மருமகளும் கெனிசியா (இந்தியா), நான்ஷி, அரினா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், நெல்சன் (இந்தியா), சிறிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அத்தையும் ஞானஉதயம், திருச்செல்வம், சிறிதரன் (ஜேர்மனி), காலம் சென்ற சிமியோன், அல்பிறட் ஆகியோரின் சகோதரியும் ஞானரத்னம், மதிவதனி, சாந்தினிதேவி (ஜேர்மன்) காலம் சென்றவர்களான புளோமினம்மா, செபமாலையம்மா, பாலசிங்கம், றோஸ்குயின் ஆகியோரின் மைத்துனியும் எல்றொய்சன், ஹரர்லின் (India), என்சி, எனோஜா, எபின், எரோன், எரின் (ஜேர்மனி) ஆகியோரின் பேத்தியுமாவார்.

ஜேர்மனியில் உள்ள PFORZHEIM என்னும் இடத்தில் அன்னாரின் நல்லடக்க ஆராதனை இடம்பெறும். அதேவேளை புனித செபஸ்ரியார் வீதி கோண்டாவில் கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் 12.03.2024 நாளை செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியளவில் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்பிறட்-டெனிசன்,
புனித செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(026)

தகவல்
மருமக்கள்.
T.P- 077 659 0751

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் ஓய்வு

இந்திய கிரிக்கெட் வீரரும், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் நட்சத்திர வீரருமான தினேஷ் கார்த்திக் நடப்பு ஐ.பி.எல் தொடருடன் ஓய்வுபெற உள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டிலிருந்து தினேஷ் கார்த்திக் அனைத்து ஐ.பி.எல் தொடர்களிலும் விளையாடியுள்ளார்.

இவர் டில்லி டேர்டவில்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், மும்பை இந்தியன்ஸ், குஜராத் லயன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகளுக்காக ஐ.பி.எல் தொடர்களில் விளையாடியுள்ளார்.

அத்துடன், இந்திய அணிக்காக 26 டெஸ்ட், 94 ஒருநாள் மற்றும் 60 இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளிலும் தினேஷ் கார்த்திக் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



## பங்களாதேஷுக்கு எதிரான சர்வதேச ரி-20

## தொடரைக் கைப்பற்றியது இலங்கை



பங்களாதேஷ் இலங்கை அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி சிலெட் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் "டொஸ்" வென்ற பங்களாதேஷ் பீல்டிங்கை தேர்வு செய்தது. இதன்படி முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்கு 174 ரன்கள் எடுத்தது. அதிக பட்சமாக தொடக்க ஆட்டக்காரர் குசல் மெண்டிஸ் 86 ரன்கள் திரட்டி னார். மற்ற வீரர்கள் சொற்ப ரன்னில் ஆட்டம் இழந்தனர். பங்களாதேஷ் தரப்பில் தஸ்கின் அகமது,ரிஷாத் ஹுசைன் தலா 2 விக்கெட்டும், ஷோரிபுல் இஸ்லாம், முஸ்தா பிஜுர் ரகுமான் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் 175 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பங்களாதேஷ் அணி, இலங்கை வீரர்களின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 19.4 ஓவர்களில் 146 ரன்னில் ஓல்-அவுட் ஆனது. இதனால் இலங்கை அணி 28 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெ ற்றது. அதிகபட்சமாக ரிஷா த் ஹுசை ன் 53 ரன்கள் எடுத்தார்.

இலங்கை அணியில் நுவான் துஷாரா 5 விக்கெட்டும், கேப்டன் ஹசரங்கா 2 விக்கெட்டும் அறுவடை செய்தனர். இலங்கை வீரர்கள் துஷாரா ஆட்டநாயகன் விருதையும், குசல் மெண்டிஸ் தொடர் நாயகன் விருதையும் தட்டிச் சென்றனர்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது போட்டி வருகிற 13 ஆம் திகதி சட்டோ கிராமில் நடக்கவுள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3060

காருணி




வந்தனா





கண்மணி




நிதர்சன்




யோகவதனி




முகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயலாப அரசியல் குழுக்களே மக்களை தூண்டி விடுகின்றன

## வெடுக்குநாறி மலை விவகாரம் குறித்து அமைச்சர் விதுர கருத்து



(கொழும்பு)

சுயலாப அரசியல் குழுக்களே மக்களைத் தூண்டி முறுகல் நிலைமைகளை உருவாக்கு கின்றன என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலையில் முன்னெடுக்கப்பட்ட சிவராத்திரி பூஜை வழிபாடுகளில் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் திருநாட்டின் நாகரீகம் சம்பந்தமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. இதில் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதங்கள் இல்லை.

இலங்கையின் புராதன நாகரீகம் சம்பந்தமான வரலாறுகளை நாம் பாதுகாப்பதுடன் அவற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்துவதே பிரதான இலக்காக உள்ளது.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் வெடுக்குநாறி மலை உள்ளது. இந்த பிரதேசமானது வனப்பரிபாலன திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. அத்தோடு வெடுக்குநாறி மலையானது தொல்பொருளியல் பகுதியாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வனப்பரிபால திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் தண்ணீர் பெவுஸர், உழவு இயந்திரங்கள் உள்ளிட்டவற்றை கொண்டு செல்வது சட்டத்திற்கு முரணானதாகும்.

அதுமட்மன்றி அப்பகுதிகளில் பிரவேசிப்பதும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கையாகும். எந்தவொரு விடயங்களையும் கருத்தில் கொள்ளாது பொது மக்கள் தாம் விரும்பியவாறு செயற்படுவதாக இருந்தால் நாட் டில் எந்தவொரு சட்டங்களும் நீதிமன்றங்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

வெடுக்குநாறி மலை விடயத்தில், அப்பாவி தமிழ் மக்களின் பின்னால் சில அரசியல் தரப்பினர் உள்ளனர். அவர்களே தமிழ் மக்களை தூண்டிவிட்டு முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள்.

தமிழ் மக்கள் அவ்விதமான தூண்டுதல்களுக்கு ஆளாவது போன்று பெரும்பான்மை சிங்கள மக்களும் பௌத்த மத குருக்களும் அதற்கு பதிலளிப்பதற்கு தூண்டப்படுகின்றார்கள்.

ஆகவே இரண்டு தரப்பிலும் தூண்டப்படுகின்ற தரப்பினர் குழப்பங்கள் ஏற்படுத்தி, முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதற்கு வித்திடுகின்றனர். இதில் அரசியல் தரப்பினர் தமது சுயலாபங்களை தேடிக்கொள்கின்றனர்.

எனவே இவ்விதமான நிகழ்வுகளை தொடர்ச்சியாக அனுமதிக்க முடியாது. ஆகவே தொல்பொருளியலைப் பாதுகாப்பது தொடர்பாக உரிய சட்ட நடைமுறை பின்பற்றப்படும்.

அதேபோன்று தொல்பொருளியல் பகுதிகளாக அடையாளம் காணப்படும் பகுதிகள் பௌத்தத்துக்குரியனவா இல்லையா என்பது முக்கியமான விடயமல்ல. அனைத்து தொல்பொருளியல் பகுதிகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

ஆகவே இந்த விடயத்தில் இனக் குழுமங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்துவதால் வெறுமனே அரசியல் குழுவினரே இலாபமீட்டுகின்றனர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1989 - இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 28 1/2
உயரம் : 5' 9"
தகைமை/தொழில்: A/L (Manager)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14100

பிறப்பு: 1990 -இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: -
உயரம் :5' 7"
தகைமை/தொழில்- A/L Manager (pvt)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14101

பிறப்பு: 1990 இந்து
நட்சததிரம்: அனுசம்
கி.பா: -
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: A/L(France)
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ள பெண்
தொ.இ: B/14102

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 4
உயரம்: 159 cm
தகைமை/தொழில்:- DCT, NCT, படவரைஞர்
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14106

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1993 - இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா உயரம் : 168cm
தகைமை/தொழில்:. Drgree(France)
எதிர்பார்ப்பு: பிரான்ஸில் படித்தவர்
தொ.இ: G/14141

பிறப்பு-2002- இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: -42 சூரி செவ் 1 இல்
உயரம் : 150cm
தகைமை/தொழில்: BA (Following)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14144

பிறப்பு -1996 - இந்து
நட்சத் திரம்: புனர்பூசம்
கி.பா: - சூரி செவ் 9 இல்
உயரம் :5' 5"
தகைமை/தொழில்: MBBS (Doctor) (uk)
எதிர்பார்ப்பு: படித்தவர். uk இல் வசிப்பவர்
தொ.இ: G/14160

பிறப்பு -1996 -இந்து
நட்சத்திரம் - புனர்பூசம்
கி.பா: சூரி செவ் 9இல்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில் BSC ( Optrometrist ) uk
எதிர்பார்ப்பு: படித்தவர். uk இல் வசிப்பவர்
தொ.இ: G/14161

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இராசிபலன்

11.03.2024
மாசி 28, திங்கட்கிழமை
பிரதமை பிற்பகல் 1.20 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 2.09 மணிவரை
சுபநேரம் -12.22-1.52 மணிவரை
இராகுகாலம் 7.52-9.22 மணிவரை
சந்திராஷ்டமம்: ஆயிலியம்

வளவன்




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு, கலகலப்பான நாள்.




மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.




வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், உதவி செய்ய சிலரே மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளலாம், வேலைச்சுமை கூடும், பிரயாண பயமுண்டு.




எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.




நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபசெய்திகள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், சேமிப்பில் அக்கறை கூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், இல்லத்தில் இன்பங்கள் கூடும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பதே நல்லது, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள்.

சிந்தனையில்லாமல் முன்னேற்றம் இருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை ப.நோ.கூ சங்கத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க நலன்புரி நிலையத்தால் பொருளியம் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

சங்கத்தின் முன்னாள் கிளை முகாமையாளரான, புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் சி.முகுந்தனினால் சங்கானைப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நலன்புரி நிலையத்திற்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் ப. கேசவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் பொது முகாமையாளர் திருமதி. கோ. கிருஷ்ண வேணி, சங்கத்தின் உப தலைவர் செ.குமாரசிங்கம், சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி. உ. கவிதா மற்றும் சங்கத்தின் முன்னாள் கிளை முகாமையாளர் சி.முகுந்தன் மற்றும் சகப் பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி)



துன்னாலை கோவிற்கடவை சித்தி விநாயகர் இரதோற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெரும் திரளான மக்களுடன நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் நாளை 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது.

வித்தியாலய பிரதி அதிபர் திருமதி.சற் குணேஸ்வரி தபேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.கிருஸ்ணபிள்ளை பிரதீபா, சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்டச் செயலகத்தின் இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர் முருகேசு கயோதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

புலோப்பளை அறத்தி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை. சற்குணம் தலைமையில் இடம்பெறும். அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (நி)

# கஞ்சாவுடன் கண்காட்சிக்கு சென்ற பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் இலங்கை விமானப் படையின் கண்காட்சிக்கு கேரள கஞ்சாவுடன் சென்ற பெண் ஒருவர் நேற்றுகைது செய்யப்பட்டார்.

நயினாதீவைச் சேர்ந்த 26 வயதான பெண்ணே இரண்டு கிலோ கிராம் எடையுள்ள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்றுவருகிறது.

இதன்போது கண்காட்சியின் பிரதான நுழைவாயிலில் பொதியுடன் வந்த பெண்ணை சோதனையிட்ட போதே கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த பெண் விமானப்படையினரால் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டநிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-33)

# 22 தமிழக கடற்றொழிலாளர்கள் காரைநகரில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காரை நகர் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போதே காரைநகர் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக கடற்றொழிலாளர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக, ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-33)



தவக்கால சிறப்பு நிகழ்வாக பாசையூர் பங்கில் கடற்கரை சிலுவைப்பாதை கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பாசையூர் கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகத்தில் நடைபெற்ற இச்சிலுவைப்பாதை தியானத்தில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தார். (படம்: சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 400 |
| தக்காளி | 350 | 300 | 320 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 140 | 200 |
| கோவா | 350 | 400 | 400 | 400 |
| கரட் | 400 | 400 | 480 | 500 |
| பூசணி | 350 | 220 | 200 | 300 |
| புடோல் | 160 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 150 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 600 | 400 | 580 | 600 |
| பாகற்காய் | 450 | 350 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 260 | 300 | 300 | 400 |
| கறிமிளகாய் | 400 | 600 | 380 | 400 |
| முருங்கைக்காய் | 1100 | 1400 | 1000 | 1200 |
| போஞ்சி | 600 | 250 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 320 | 500 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



திருமதி.கமலரஞ்சிதவனிதா சத்தியசீலன்

இ.ஆ.சே- I

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி கல்விமானி பட்டதாரி ஆசிரியர்)

தனது 33 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி.கமலரஞ்சிதவனிதா சத்தியசீலன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் நலமாகவும் சுபீட்சமாகவும் வாழ மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| 15.03.1990 -29.02.1992 | - மு/வள்ளுவர்புரம் பாரதி வித்தியாலயம் |
| 01.03.1992 -05.05.1998 | - மு/புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் |
| 06.05.1998 -31.12.2002 | - மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் |
| 01.01.2003 -15.01.2004 | -யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் |
| 16.01.2004 -18.07.2004 | -யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை |
| 19.07.2004 -31.12.2016 | -யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் |
| 01.01.2017 - 31.05.2023 | -யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் |

(027)

வாழ்த்துபவர்கள்- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள்
யா/ மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்.


# நெல்கொள்வனவு ஆரம்பம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நாட்டில் நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைசசர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, இன்று முதல் நெல் கொள்வனவை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கத்திடம் இருந்து இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறவில்லை.

அந்த உதவிகள் கிடைக்கப்பெறவில்லை என்றால் அமைச்சின் நிதியினூடாக நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட கணனி உபகரணங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் (பாவிக்கப்பட்ட ரயர்கள், பற்றறிகள் வாகன உதிரிப்பாகங்கள், மின்சாரப் பொருட்கள் வெற்றுத்தார் பரல்கள், இரும்பு கதவுகள்) பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. பொருட்களை அன்றைய தினம் காலை 9.00 மணி முதல் பார்வையிட முடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு பணமாக ரூபா 500.00 ஐ சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(சி-8504)

இடம் : சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகம்
காலம் : 26.03.2024 (செவ்வாய்க்கிழமை)
நேரம் : மு.ப 10.00 மணி

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.


# ஏப்ரலில் ஆட்சி மாற்றம் ஏற்பட அதிக வாய்ப்பு

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட அதிக வாய்ப்புள்ள செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதன்படி பசில் ராஜபக்ஷவின் செயற்பாட்டின் பிரகாரம் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குழுவொன்று அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சிக்கு செல்லவுள்ளதாகவும் அதே வேளையில் நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறுபுறம் சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்கவை இணைக்கும் நடவடிக்கை இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து சஜித் பிரேமதாஸ உட்பட பல தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகள் அடங்கிய தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுடனான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி)

# இணையத்தளங்களுக்கு அடிமையான சிறுவர்களை ஒரே நாளில் மீட்பது சாத்தியமில்லை

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

(கொழும்பு)

கையடக்க தொலைப்பேசியின் ஊடாக இணையத்தளங்களுக்கு அடிமையான சிறுவர்களை ஒரே நாளில் மீட்பது சாத்தியமில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குழந்தைகளை வேறு பணிகளுக்கு வழிநடத்துவதன் மூலம் அவர்கள் கையடக்கத் தொலைப்பேசி மற்றும் இணையத்தளத்திற்குத் திரும்புவதைத் தடுக்க முடியும் என அதன் தலைவர் தெரிவித்தார்.

கனடாவில் வீடொன்றில் வைத்து 6 இலங்கையர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் சிறுவர்கள் கையடக்கத் தொலைப்பேசி மற்றும் இணையத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் மீண்டும் விவாதம் எழுந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## NSB பகிரங்க ஏலவிற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31.01.2023 இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு, கீழ்குறிப்பிடப்படும் திகதிவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 23.03.2024 தொடக்கம் 31.03.2024 வரையான காலப் பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

| கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவு திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|
| கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 21.03.2024 | 23.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி, கொடிகாமம் |
| முல்லைத்தீவு, மல்லாவி | 21.03.2024 | 23.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி,முல்லைத்தீவு |
| சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 21.03.2024 | 24.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி ,சுன்னாகம் |
| வவுனியா | 21.03.2024 | 24.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி,வவுனியா |
| நெல்லியடி,அச்சுவேலி, பருத்தித்துறை | 27.03.2024 | 30.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி, நெல்லியடி |
| மன்னார், வங்காலை | 27.03.2024 | 30.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி, மன்னார் |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் II ஆம் கிளை ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய் | 27.03.2024 | 31.03.2024 | தேசிய சேமிப்பு வங்கி ,யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(சி-8505)

பிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 2024 ஆம் ஆண்டிற்கான உலக அழகிப் போட்டி

### மகுடம் சூடினார் செக்குடியரசுப் பெண்



(டில்லி)

2024ஆம் ஆண்டுக் கான உலக அழகிப் பட்ட த்தை செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ் கோவா என்ற பெண் வென் றுள்ளார்.

71 ஆவது உலக அழகிப் போட்டி மும்பையில் உள்ள ஜியோ கன்வென்ஷன் மைய த்தில் நடைபெற்றது.

28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடக்கும் உலக அழகிப் போட்டி இது வாகும்.

இந்த போட்டியில் செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் உலக அழகியாக அறிவிக்கப்பட்டார்.

இவர் 115 நாடுகளைச் சேர்ந்த அழகிகளை எதிர்த்து போட்டியிட்டார்.

மேலும் 24 வயதாகும் கிறிஸ்டினா மாடலாக இரு ந்து கொண்டே சட்டம் மற் றும் வணிக நிர்வாகம் ஆகிய இரண்டிலும் பட்டப்படி ப்பை படித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# மொஸ்கோவி

# தாக்குதலுக்

## அமெரிக்க தூதரக

(வோஷிங்டன்)

### மொஸ்கோவில் தீவிரவாதிகள் தாக்குதல் அபாயம் உள்ளதாக ரஷ்யாவில் உள்ள அமெரி கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொஸ்கோவில் உள்ள யூத ஜெப ஆலயத்தைத் தாக் கும் சிறை அறையில் இரு ந்து ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சன்னி முஸ்லிம் பயங்கரவாதியின் சதித் திட டத்தை ரஷ்ய இராணுவம் முறியடித்ததை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகம் தாக்கு தலின் தன்மை குறித்து மேல திக தகவல்களை வழங்கவி ல்லை.

மேலும் நாட்டிலுள்ள அமெரிக் கர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரப்பட்டுள் ளது. எது ...

## ஹிட்லர்.. ஸ்டாலின்.. முசோலினி வரிசையில் நெதன்யாகு-எர்டோகன் சாடல்

(துருக்கி)

“நெதன்யாகுவும் அவரது நிர்வாகமும் காசாவில் மனித குலத்திற்கு எதிரான குற்றங் களைச் செய்து ஹிட்லர், முசோலினி மற்றும் ஸ்டா லின் ஆகியோருக்கு அடுத்த படியாக தங்கள் பெயர்களை எழுதுகிறார்கள்” என்று இஸ்ரேல் ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன் இஸ்தான் புல்லில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இடம்பெற்ற உரையில் தெரிவித்தார்.



காசாவில் நடந்த போரின் தொடக்கத்தில் இருந்தே எர் டோகன் இஸ்ரேலை கடுமை யாக விமர்சிப்பவர்களில் ஒருவராக இருந்து வருகி றார்.

எர்டோகன் முன்னர் இஸ் ரேலை “பயங்கரவாத நாடு” என்று அழைத்தார். மற்றும் காஸாவில் “இனப்படுகொலை” நடத்தியதாக குற்றம் சாட்டி னார்.


முன்னதாக தனது உரை யில் ஹமாஸை பயங்கர வாத குழுவாக அங்கீகரிக்க மறுத்த அவர் ஹமாஸ் மற் றும் அதன் தலைவர்களை துருக்கி உறுதியாக ஆதரிக்கும் எனவும் தெரிவித்தார். (ரி)

## 280 பாடசாலை ம

## துப்பாக்கி முனையில் கடத்

(நைஜீரியா)

ஆபிரிக்க நாடான நைஜீ ரியாவில் பல்வேறு ஆயுதக் குழுவினர் செயற்பட்டு வருகி றார்கள். இந்நிலையில் அந்நாட்டின் வடக்கு நகரமா ன குரிகாவில் உள்ள பள் ளிக்கு துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் சிலர் வந்து துப்பாக்கி முனையில் 280 இற்கும் மேற்பட்ட மாணவர் களை கடத்தி சென்றனர்.



மாணவர்கள் கடத்தப்ப ட்டதை அந்த மாகாண கவர்னர் உபாசானி உறுதிப் படுத்தியுள்ளார்.

இதுகுறித்து நைஜீரியா ஜனாதிபதி போலா டினுபு கூறும் போது கடத்தப்பட்ட குழந்தைகளை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட் டுள்... முய... ஈடு...

## பாகிஸ்தான் புதிய ஜனாதிபதியாக ஆசிப் அலி சர்தாரி தேர்வு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ஜனாதி பதியாக மீண்டும் ஆசிப் அலி சர்தாரி தேர்வு செய்ய ப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அதன்படி, பாகிஸ்தானின் 14ஆவது ஜனாதிபதியாக ஆசிப் அலி சர்தாரி பொறுப் பேற்கிறார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனா சீர் பூட்டோவின் கணவ ரான இவர் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகி றார்.

2008 முதல் 2013 வரை ஆசிப் அலி சர்தாரி பாகிஸ் தான் ஜனாதிபதியாக பதவி வகித்த நிலையில் தற்போது 11 ஆண்டுக்குப் பிறகு அவர் மீண்டும் ஜனாதிபதியாக பொறுப்பேற்கிறார்.

பாகிஸ்தானின் புதிய ஜனா திபதியை தேர்ந்தெடுப்பதற் கான வாக்குப்பதிவு பாரா ளுமன்றத்திலும் அனைத்து மாகாண சட்டசபைக ளிலும் நேற்று நடைபெற் றது.

இதில் ஆசிப் அலி சர்தா ரிக்கு 255 வாக்குகள் பெற் றுக்கொண்ட நிலையில் அவருக்கு எதிராக போட்டி யிட்ட முகமது கான் அசாக் சாய்க்கு 119 வாக்குகள் கிடை த்தன.

இதன்படி அதிக வாக்கு களைப் பெற்ற ஆசிப் அலி சர் தாரி பாகிஸ்தானின் 14 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இதன்போது, நாட்டை முன்னெடு த்துச் செல்ல அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து செயற்பட வேண்டும் என சர்தாரி கேட்டுக் கொண்டார்.

மக்களில் ஒருவர் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக பொறு ப்பேற்பது பாகிஸ்தான் வரலாற்றில் இதுவே முதல்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில் தீவிரவாத க்கு வாய்ப்பு

## ரகம் எச்சரிக்கை


### தல் நடத்தும் மெரிக்க தூதர



மலை வி ரிக் ட்டு ள் எதாகவும் தெரி விக்கப்பட்டுள் ளது.

மொஸ்கோவில் உள்ள அமெ ரிக்க தூதரகம் அடுத்த 48 மணி நேரத்திற்குள் மக்கள் கூடும் எந்த இடத்திலும் சுற்றித் திரிவதைத் தவிர்க்கவும், மொஸ் கோவில் பல்வேறு சடங்கு கள் மற்றும் மத வழிபாடு களில் பங்கேற்பதைத் தவி ர்க்கவும் தனது குடிமக்க ளுக்கு அறிவுறுத்தியுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (நி)

# அதிக வெப்பமான மாதமாக பெப்ரவரி அறிவிப்பு



0 பெப்ரவரி மாதம் உலகின் அதிக வெப்பமான மாதமாக பதிவானதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை சேவை தெரிவித்துள்ளது.

இதன்படி மாதாந்த வெப்ப நிலை பதிவுகளில் தொடர்ச் சியாக ஒன்பதாவது மாதமாக வெப்பம் உச்சத்தைத் தொட்டு ள்ளது.


கடந்த 2023 ஜூன் மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாத மும் வெப்பநிலை புதிய உச்ச த்தைத் தொட்டுள்ளது.

உலகின் கடல் மேற்பரப் பின் வெப்பம் சாதனை அளவு க்கு பதிவாகி இருப்பதோடு அந்தார்டிக்காவின் கடல் பனி கடுமையாக குறைவடைந்து ள்ளது.

எல் நினோ காலநிலை நிகழ்வு வெப்பம் அதிகரிப்பத ற்கு காரணமாக இருந்த போதும் மனித செயற்பாட் டால் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் இதற்கு பிரதான காரணியாக உள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள் ளனர்.

இதன்படி கடந்த பெப்ரவரி யில் மனிதன் அதிக அளவு புகைபடிவ எரிபொருளை எரி க்க ஆரம்பித்த தொழில் துறை க்கு முந்திய காலத்தை விட வும் சுமார் 1.77 செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடதக்கது. (நி)

# ல மாணவர்களை கடத்திய பயங்கரவாதிகள்



ம் ளை ப் டுள்ளோம் அவர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் இது வரை ஆயிரத்திற்கும் மேற் பட்ட மக்களைக் கடத்தியிருப் பதாகக் கூறப்படுகிறது. அவர் கள் கேட்கும் தொகையை கொடுத்த பிறகு கடத்திய வர்களை விடுவிக்கிறார்கள்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நைஜீரியாவின் வடக்கு மாகா ணமான போர்னோவின் சிபோக் கிராமத்தில் 200இற்கும் மேற்பட்ட பள்ளி மாண விகள் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் உலகம் முழு வதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பித்தக் கது. (நி)



# உணவுப்பொதி வழங்கலின்போது பரசூட் விழுந்து ஐவர் பலி

## 10 பேர் காயம்





(காசா) காசாவின் வடக்கு பகுதி யில் வான்வழியாக மனிதாபி மான உதவிகள் வழங்கப் பட்ட போது ஏற்பட்ட பாரசூட் விபத்தில் 5 பேர் உயிரிழந்துள் ளனர்.

10 பேர் காயமடைந்துள் ளனர். காசாவின் வடக்கில் ஷாதி என்ற பகுதியில் பாரசூட் மூலம் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

இதன் போது பாரசூட் ஒன்று பழுதாகி உணவுப் பொருட்களுடன் மக்கள் கூடி யிருந்த பகுதியில் வீழ்ந்து ள்ளது.

இதில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். உண வுப் பொதிகள் மக்களின் தலையில் வீழ்ந்து பலர் காயமடைந்துள்ளதாக கூறப் பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த வர்கள் காஸாவின் அல் ஷிஃபா மருத்துவமனையின் அவ சர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கோர விபத்து கட லோரத்தில் உள்ள அல் - ஷாதி அகதிகள் முகாமுக்கு அருகில் நடந்ததாக மருத் துவமனையின் தலைமை செவிலியர் தெரிவித்துள் ளார்.

5 மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து வரும் வடக்கு காசாவில் ஆயிரக்கணக்கான மக்கள் மோசமான நிலை யில் உள்ளனர். அங்குள்ள வர்களுக்கு அமெரிக்காவும் ஜோர்தானும் வான்வழியாக உதவிகளை வழங்கி வருகி ன்றன.

இதனிடையே வான்வழி யாக உதவிகள் வழங்கு வதோ அல்லது கடல் வழி யாக உதவிகள் வழங்கு வதோ காஸாவிற்கு தரை வழியாக உதவிகள் வழங்கு வதற்கான மாற்றாக இருக்க முடியாது என்றும் எல்லை வழியாக லொறிகள் மூலம் உதவிகள் வழங்கப்படுவதை அனுமதிக்க வேண்டும் என் றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# உறக்கமும் சித்தமருத்துவம் கூறும் ஆரோக்கியமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D(Siddha)India சிரேஷ்ட விரிவுரையாளர் சித்தமருத்துவத்துறை யாழ்.பல்கலைக்கழகம்

உடலின் உள் உறுப்புகள் தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டு புத்துணர்ச்சி பெற ஒழுங்கான உறக்க முறை அவசியமாகிறது.

இந்திரியங்கள் (உணர்வு உறுப்புகளும், இயக்க உறுப்புகளும்)- Sensory and motor organs) உறக்கத்தால் புத்துணர்ச்சி அடையும், மனம் உற்சாகமடையும் ஆயுள் நீளும் என சித்தர் பாடல் கூறுகிறது. இதிலிருந்து உடலும் மனமும் இயல்பாக இயங்க ஆழ்ந்த உறக்கம் அவசியம் என்பது தெரிகிறது.

ஐந்திந் திரியங்கசைவுக் கிமகலும்
நைந்த மனதிற் குற்சாக நண்
ணுங்காண் பைந் தொடியே
மேனீட்டு மாயுளுறும் மெய்யினயர்
வொழியுங் கானீட்டிப் பள்ளி
கொள்ளுங்கால்.

இளம் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு அதிக நேரம் உறக்கம் அவசியம்.

பிறந்த குழந்தை- 16-20 மணி நேரம்.

3 மாதத்திலிருந்து ஒரு வயது வரை -15 மணிநேரம், 1 வயது முதல் 3 வயது வரை -14 மணிநேரம், 3 முதல் 7 வயதுவரை- 12 மணிநேரம், ஏழு வயது முதல் 10 வயது வரை-10 மணிநேரம், பத்து முதல் பதினேழு வயதுவரை- 7-9 மணிநேரம், 17 வயதிற்கு பதினேழு வயதுவரை - 7-9 மணிநேரம் 17 வயதிற்கு மேல் 7மணி நேரம் உறக்கம் அவசியமாகிறது. அவசியமாகிறது. 13 வயதிற்கு மேலாக பிராணாயமத்தின் மூலமாகவும் ஒக இருக்கைகளின் (யோகாசனங்கள்)மூலமாகவும் உறக்க நேரத்தினை குறைத்துக் கொள்ளலாம்.

சித்த மருத்துவத்தில் பல வகையான படுக்கைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்துவம் உண்டு. உதாரணமாக கோரைப் பாயினால் உடற்சூடு தணியும். காசநோய் உள்ளவர்களின் உடல் வன்மை பெருகும். அத்துடன் இடது பக்கமாக சரிந்து படுக்க வேண்டும்.

அதாவது இடது கையை மடித்து தலையணையை ஒட்டியோ, தலைக்கு கீழோ வைத்துக் கொண்டு இடது காலை மடித்துக் கொண்டு வலது காலை நீட்டிக் கொண்டு வலது கையை நீட்டி வலது காலிற்கு மேல் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

இப்படி உறங்கினால்தான் உறக்கத்தின் முழுப்பலனை அடைய முடியும் எனச் சித்தர்கள் கூறுகின்றனர். வலது பக்கமாகவோ, மல்லாந்தோ, குப்பறப் படுக்கவோ கைகளையும் கால்களையும் விரித்தோ தூங்கக் கூடாது. கிழக்குத் திசையில் தலை வைத்துப்படுத்தல் சித்தர்களால் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது. இப்படிப் படுப்பதால் உடல் உள் உறுப்புக்கள் வலிமையடையும்.

இரவு 9 மணியிலிருந்து காலை 5 மணிக்குள்ளாக 6 அல்லது 7 மணி நேரம் உறங்க வேண்டும்.

இந்த நேரத்தில் உறங்கினால் மட்டுமே உடல் நன்மைகள் கிடைக்கும். பகலில் உறங்கினால் உடலின் இயல்பான சுழற்சி இயக்கம் பாதிககப்பட்டு பல நோய்கள் ஏற்படும். சில நோயாளர்களும், தொடர் உழைப்பில் உள்ளவர்களும் பகலில் வைத்திய ஆலோசனைப்படி உறங்கலாம். அதிக நேரம் உறங்கினால், மயக்கம், தலைவலி, மூக்கு நீர் வடிதல், உடற்சூடு கூடுதல் போன்றவை ஏற்பட்டு உடல் நலம் பாதிக்கப்படும். இரவில் உறக்கம் இல்லாவிட்டால் ஐந்து புலன்களுக்குச் சோர்வு, மயக்கம், படபடப்பு, மனச்சோர்வு, பசிக்குறைவு, மலச்சிக்கல் ஏற்பட்டு பல நோய்கள் உடலை வாட்டுவதற்கு காரணமாகும்.

உறக்கம் குறைவதால் மூளையின் இயக்கம் பெருமளவு பாதிக்கப்படுகிறது. இதனால் நினைவாற்றல் குறைந்து மனப்பதற்றமும் மனச் சோர்வும் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொடர் உறக்கமில்லா நிலையினால் தெளிவாக பேசும் ஆற்றல் குறையும்.

காலநிலை மாறுபாடுகளை உணரும் ஆற்றலும், முடிவெடுக்கும் ஆற்றலம் மிக மோசமாக பாதிக்கப்படுவதாக அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கின்றது.

இவற்றால் மன அழுத்தம் (Stress) அதி இரத்த அழுத்தமும் (Hypertension) தொடரும். இயல்பான ஆழ்ந்த உறக்கத்திற்கு இரவு உணவினை 7 மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

கோப்பி தேநீர் போன்ற மன ஊக்கி பானங்களை தவிர்க்க வேண்டும். இரவு உணவில் காரம், புளிப்பு , உப்பு அளவோடு இருக்க வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். இரவு உணவிற்கு பின்பாக அரை மணிநேரம் கழித்து மெதுவாக நடைப் பயிற்சி செய்ய வேண்டும். இனிமையாக நிகழ்ந்த அன்றைய நிகழ்வுகளை மனதில் அசை போட்டுக்கொள்ளலாம். மூச்சுப் பயிற்சியும் மனப்பயிற்சியும் ஆழ்ந்த உறக்கத்திற்கு வழி வகுக்கும்.

உறங்கும் அறை காற்றோட்டமுள்ளதாக இருக்க வேண்டும். கோரைப்பாய், மூங்கில் பாய், மரக்கட்டில்கள், பருத்தித்துணி போன்றவை ஏற்றவையாகும். இரவு சிறுநீர், மலம் கழித்துவிட்டு உறங்கச் செல்ல வேண்டும். அத்துடன் இரவு உணவு எளிதில் செரிக்கும் தன்மை உள்ளதாக இருக்க வேண்டும். இரவு உறங்கும் முன் தேன் கலந்த குளிர்ந்த நீர் பருகலாம்.



## இன்று ஒரு தகவல் 61



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உடல் நலம் உங்கள் கையில்

அதோ போய்க்கொண்டு இருக்கிறாரே...

அவர் கையும் சுத்தம், வாயும் சுத்தம்.அப்படியென்றால் என்ன அர்த்தம். அவர் கையையும் வாயையும் சோப்புப் போட்டுக் கழுவி சுத்தமாக வைத்திருக்கிறார் என்றா அர்த்தம்?

அப்படி இல்லை வாய் சுத்தம் என்று சொன்னால் சொல் தவறாதவர். . கைசுத்தம் என்று சொன்னால் இலஞ்சம் வாங்காதவர். கை சுத்தமாக இருந்தால் யாருமே கவலைப்பட வேண்டியதில்லை. மருத்துவ ரீதியாகவும் இது உண்மை. இப்போது சாதாரணமாக உடம்பு சரியில்லையென்று டொக்டரிடம் போனால் நாக்கை நீட்டச் சொல்லிப் பார்க்கிறது வழக்கம். சில அமெரிக்க டொக்டர்கள் இப்போதெல்லாம் கையைக் கவனித்துப் பார்க்க ஆரம்பிக்கிறார்கள். கைகள் உடம்புகளிலே உள்ள கோளாறுகளைக் காட்டும் கண்ணாடிகள் என்று அவர்கள் சொல்கிறார்கள். நோயாளியின் உடல்நிலை மட்டுமில்லை மன நிலையையும் கையிலிருந்து கண்டுபிடித்து விடுவார்கள்.

ஒரு மனிதன் பேசும் போதே அவன் சொல்கிறதை விட கையிலேயிருந்து அதிகமான விடயங்களை தெரிந்து கொள்ள முடியுமாம். படபடப்பாயிருக்கும் ஒருவன் கையைப் போட்டு பிசைவதும் உண்டு. சில பேர் கையிலே என்னென்ன நகை போட்டிருக்கிறேன் பார் என்பதை அவர்களின் கை சொல்லாமலே சொல்லிவிடும் நம்மிடம். ஒருவன் அரை குறையான சம்மதத்தோடு.. சரி அப்படியே செய்கிறேன் என்று வாயாலே சொல்கிறார் என்று வையுங்கள். அவர் அப்படிச் செய்யப் போவது இல்லை என்று அவருடைய கை காட்டிவிடும்.

பெரும்பாலான விபத்துக்களிலே கைதான் சேதமாகிறது. விரல்களிலே நகம் இருக்கிறதல்லவா. அதைப்பார்த்துவிட்டு உடலைப் பற்றிய பல விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு நோயாளி டொக்டரிடம் வந்தார்.

டொக்டர் எனக்கு உடம்பு.. என்று ஆரம்பித்தார். அதெல்லாம் இருக்கட்டும் முதலில் உங்கள் நுரையீரலிலே கோளாறு இருக்கிறது. உடனே ஒரு நுரையீரல் நிபுணரிடம் செல்லுங்கள் என்று சொன்னார்.

இவரென்ன மருத்துவரா ஜோசியரா என்று வந்தவருக்குச் சந்தேகம்!

எப்படித் தெரிந்தது அவருக்கு? வேறொன்றும் இல்லை அந்த நோயாளியின் கைவிரல் முனைகள் குமிழ் மாதிரிப் பெரிதாகவிருந்தது. நகங்களிலே மங்கலான நீல நிறமும் சாம்பல் நிறமும் தெரிந்தால் அவ்வளவுதான். இது மாதிரி குழந்தைகளுக்கிருந்தால் இதயத்திலே பிறவிக் கோளாறு என்று ஊகித்து விடலாம். பெரியவர்களுக்கு அப்படி இருந்தால் நுயைீரலிலே கோளாறு என்று அர்த்தம்.

கைகளிலே நிறம் மாறுவதென்பது ஒரு முக்கியமான அறிகுறி. உள்ளங்கையிலே வழமைக்கு மாறாக மஞ்சள் நிறம் தெரிந்தால் என்ன அர்த்தம் தெரியுமா? இரத்தத்திலே கொலஸ்ட்ரால், டிரைகிளிசரைடு இவையெல்லாம் அதிகமாகச் சேர்ந்து. Hyperlipo Proteinemia என்கிற கோளாறு ஏற்பட்டிருக்கும் என்று அர்த்தம். ஒரு நோயாளியின் கை அளவுக்கு மீறி சிவப்பாக இருந்தால் Pulmar Erythema என்கிற கோளாறு இருக்கிறதாம்.

கருவுற்ற பெண்களுக்கு உள்ளங்கை சிவப்பாக இருக்கிறது உண்டு. அதனால் தவறொன்றும் இல்லை. ஆனால் மற்றப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் உள்ளங்கை அளவுக்கு மீறி சிவப்பாக இருந்தால் ஈரல்லிலே சிர்ரோசிஸ் என்னும் கோளாறு இருக்கலாம்.

விரல் நகங்களிலே வெள்ளைப்புள்ளி இருந்தால். இரத்தத்திலே ஏதோ குறை என்றும் நகம் வெளுத்திருந்தால் இரத்த சோகை என்றும் அர்த்தம்.

ஒரு பெண் மருத்துவரை சந்திப்பதற்கு பெண்ணொருவர் வந்தார். கை குலுக்கிய சமயத்திலேயே அந்த பெண்ணிற்கு மூட்டுவாதம் ஆரம்பநிலை என்பதைக் கண்டுபிடித்து விட்டார்.

எப்படி? பிடி வலுவில்லாமலே இருந்தது உள்ளங்கை லேசா ஈரமா இருந்தது, தோல் மெல்லியதாக இருந்தது, கதகதப்பாக இருந்தது அவ்வளவு தான் நோயைக் கண்டுபிடித்து விட்டார்.

ஒரு பெரியவர் தன் பிள்ளையின் கை விரலைத் தொட்டுப் பார்த்துவிட்டு மகனே சிகரெட் பிடிக்கும் பழக்கம் இருக்கா? என்று கேட்டார். கிடையவே கிடையாது அப்பா என்றான் மகன். மகனே நீ பொய் சொல்லலாம் உன் கை விரல் பொய் சொல்லாது. உன் விரலின் நிக்கோட்டினாலே ஏற்படும் மஞ்சள் கரை இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் உன் கைவிரல் நுனிகள் ஜில்லுன்னு இருக்கு.

புகைப்பிடிக்கிறதனாலே விரல் நுனியிலே உள்ள ரத்தக் குழாய்கள் அடைப்பட்டு போகிறது. அதனால் இப்படி ஆகிவிடுகிறது.

சிகரெட் உன் உடம்பை பாதிக்க ஆரம்பித்துவிடுகிறது.

உடனே நிறுத்திவிடு. நான் சொல்வதைக் கேட்கவில்லை என்றாலும் உன் விரல் சொல்வதைக்கேள் என்று புத்தி சொல்லிவிட்டு அப்பா கேட்டார். அதுசரி மகனே தினமும் உனக்கு சிகரெட் எங்கேயிருந்து கிடைக்கிறது? என்றார். உங்கள் சட்டைப்பையில் இருந்து தான் அப்பா எடுக்கிறேன். என்றான் பையன்!

புத்தி சொல்கிறவர்கள் இப்படி இருந்தால் கேட்கிறவர்கள் எப்படி சேர் சரியாகக் கேட்பார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன் பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துங்கள்

## பொது அமைப்புகள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையினை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துமாறு இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அக்கராயன் வைத்தியசாலையுடன் ஒரே தரத்தில் இருந்த மல்லாவி, முழங்காவில், மாங்குளம் ஆகிய வைத்தியசாலை ஆதார வைத்தியசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ள போதிலும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலை தரமுயர்த்தப்படாமலே உள்ளது.

அக்கராயன் பிரதேச வைத்தியசாலையினை நம்பி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில், யூனியங்குளம், முல்லைத்தீவின் அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையினை நம்பியுள்ள நிலையில் வைத்தியசாலை தரமுயர்த்தப்படாததன் காரணமாக நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றனர்.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி இடப்பெயர்வின் போது அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இயங்கியது. கிளிநொச்சிக்கு மாவட்ட வைத்தியசாலை செல்லும் போது அக்கராயன் பிரதேச வைத்தியசாலை தரமுயர்த்தப்படும் என்ற முடிவுகள் கூட்டங்களில் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

# முதலை கடித்து பெண் படுகாயம்

(அக்கராயன்)

முதலையினால் கடியுண்டு படுகாயமடைந்த நிலையில் பெண்ணொருவர் யாழ்ப் பாண போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பின் மன்னாகண்டல் வசந்தபுரம் கிராமத்தில் தமது வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்படும் ஆடுகளை குடிநீருக்காக பேராற்றிற்கு கொண்டு சென்ற வேளை பேராற்றில் இருந்த முதலை குறித்த பெண்ணின் வலது கையினை கடித்துள்ளது.

இதில் படுகாயமடைந்த பெண் உடனடியாக முல்லைத்தீவு பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

47 வயதுடைய சாமிநாதன் விசாலாட்சி என்ற பெண்ணே முதலையினால் கடியுண்டு படுகாயமடைந்தவர்.

20 நாட்களுக்கு முன்னரும் இப்பகுதியில் மாடுகளை மேய்ச்சலில் ஈடுபடுத்தியவர் பேராற்று பகுதிக்கு சென்ற போது முதலையினால் கடியு ண்டு காலில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-350)

# கலாநிதி கலாமணி எனும் பெயரில் நம்மோடு பழகிய நல் ஆத்மா



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து ஓய்வுபெற்ற கலாநிதி தம்பி ஐயா கலாமணி எனக்கு பல வகைகளில் நெருக்கமானவர். நாம் இருவரும் யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமான அறிவுச் செழுமை மிக்க வடமராட்சிக் கல்வி்புலத்தை சார்ந்தவர்கள். சமகாலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக கற்பித்தல் மற்றும் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டவர்கள். அத்துடன் கலாநிதி கலாமணி அவர்களுடைய பூர்விக வாழ்விடம் அமைந்திருக்கும் அல்வாய்க் கிராமத்தின் பழமை மிக்க மனோகரா விளையாட்டுகழகத்தின் மைதானத்திலும் அவர்களால் நடத்தப்பட்ட பல உதைபந்தாட்டப் போட்டிகளிலும் எனது பல மாலைப் பொழுதுகளை நான் மகிழ்வோடும் உற்சாகத்தோடும் களித்திருக்கிறேன். எனக்கு சற்று மூத்தவரான கலாநிதி கலாமணியை அன்று தொட்டு இன்று வரை நான் நன்கு அறிவேன்.

ஒரு பிறவிக் கலைஞனாக, மாணவர்கள் மனங்களை அறிந்து கற்பிக்கும் நல் ஆசிரியராக, வாண்மை மிக்க நல்ல பல ஆசிரியர்களை உருவாக்கிய ஒரு ஆசிரியக் கல்வியியலாளனாக, ஓர் சமூகத்தை செதுக்கி அதனை உயர்நிலைக்கு கொண்டு வந்த சமுதாய சிற்பியாக, உளவியல்,வாழ்வியல் கல்வியியல் சார்ந்த கருத்துக்களை தன் படைப்புகளின் ஊடாக வெளிக்கொணர்ந்த ஆக்க இலக்கிய கர்த்தாவாகப் பல வழிகளில் கலாநிதி கலாமணியுடைய பரிமாணம் விரிந்து செல்கிறது.

இவரது இளகிய மனம், மென்மையான குணம், மற்றவரைப் பகைக்காது பழகும் பாங்கு, இளவரசன் போன்ற அழகிய தோற்றம் என்னை அதிகம் அவர் மீது ஈர்ப்புக் கொள்ள வைத்தன. இவற்றையும் தாண்டி கலாநிதி கலாமணி அவர்களை நான் ஒரு கர்ம வீரனாகவும் கடமை வீரனாகவும் பார்க்கின்றேன். தானும் உயர்ந்து தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்துகின்ற பெருமனதோடு வாழ்ந்து தன்னுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்தவர் கலாநிதி கலாமணி.

அவருடனான எனது நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றபோது கடும் சொல் அறியாத மென்மையான போக்குக் கொண்ட, மற்றவர் உயர்வையும் நினைக்கின்ற ஒரு நல்ல ஆத்மாவாகவே அவர் எனது நினைவுகளில் வருகின்றார்.

மிக இளைய வயதில் பௌதிகவியல் ஆசிரியராகத் தனது கற்பித்தல் பணியை ஆரம்பித்தவர். தனக்கான நீண்ட மாணவத் தலைமுறையை ஆசிரியத்துவத்திலே உருவாக்கினார். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் பௌதிக ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் அதற்கு முன் பௌதிகவியல் துறையில் உதவி விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். பின் தனது கவனத்தை கல்வியியல் துறையின்பால் குவித்த கலாமணி அத்துறையிலும் தனது கனதி யான தடங்களைப் பதித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையேற்ற சிறிது காலத்திலேயே உலக வங்கியின் புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு வோலங்கோங் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தை நிறைவுசெய்தவர்.

## மறைந்தார் மாண்பு

அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த காலப்பகுதிகளிலும் கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்தவர். அங்கும் அவுஸ்திரேலியா வாழ் தமிழ் உறவுகளின் பிள்ளைகளுக்கு தமிழ் கற்பித்ததுடன் நாடகம் பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டவர்.

அப்போதிருந்த போர்காலச் சூழல் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாடல் பலவீனங்கள் அவரைக் குறித்தகாலத்தில் பல்கலைக்கழக பணிக்குத் திரும்புவதை சவாலுக்கு உட்படுத்தின. அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கக்கூடிய வாய்ப்பிருந்த போதும் தான் வரித்துக் கொண்ட ஆசிரியத்துவ வாழ்வு தனது மண்ணில் தொடர வேண்டும் என்பதற்காகவும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் நிமிர வேண்டும் என்பதற்காகவும் தாயகத்துக்கு திரும்பி மீண்டும் புதிய நியமனமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையில் இணைந்தார். இடையறுந்த அவரது சேவையினால் நமது கல்விப் புலத்துக்கு ஓர் ஆளுமை மிக்க பேராசிரியர் கிடைக்க முடியாத துர்ப்பாக்கியத்தை உருவாக்கியது.

இன்று நமது கல்விப்புலத்தில் அதிகம் பேசப்படும் செயல்நிலை ஆய்வுகளை நமது தமிழ் கல்விப்புலத்துக்கு அறிமுகம் செய்து வருடம்தோறும் தனது மாணவர்கள் மூலமாக பல நூறு ஆய்வுகளைச் செய்தவர் கலாநிதி கலாமணி. சர்வதேசமயப்படுத்துவதில் அவற்றின் உள்ளடக்கத் தன்மைகள் பிரதேச தனித் துவம் கொண்டமையால் தடங்கல்கள் இருந்தாலும் அவ் ஆய்வுகளின் வழி கிடைக்கப் பெற்ற முடிவுகளைத் தேசிய மட்ட கல்வி முடிவுகள் எடுக்கும் சந்தர்ப் பங்களில் பரிந்துரை செய்தவர் கலாமணி அவர்கள்.

தேசிய [illegible] தேசிய கல்வி [illegible] பல ஆய்வுகளில் ஒரு ஆய்வாளானாக பங்குபற்றிய அவர் தனது மாணவர்களின் மூலமான ஆய்வு முடிவுகளின் தொடர்ச்சியை தேசியமட்ட அறிக்கைகளுக்குள் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

பல்கலைக்கழகப் பணியில் கற்பித்தலுக்கு அப்பால் சட்டத்துறைத் தலைவர், முதுமாணி கற்கைகளின் இணைப்பாளர், புதியகலைத் திட்டங்களின் வடிவமைப்பாளர் எனப் பல வகிபாகங்களை அவர் வகித்தார். குறிப்பாக நாம் விஞ்ஞானபீடத்தில் கல்வியியலில் விஞ்ஞானமாணி எனும் முன்மாதிரியான கற்கை நெறியொன்றை எனது வழி நடத்தலில் ஆரம்பித்த போது கல்வியியல் சார்ந்த அலகுகளை வடிவமைப்பதிலும் அவற்றைக் கற்பிப்பதிலும் அவரது பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. குறிப்பாக ஆங்கில மொழி மூலமாகநடைபெற்ற இக் கற்கை நெறியில் தனது புலமைத்துவத்தால் கலாநிதி கலாமணி அவர்கள் ஒரு தடத்தைப் பதித்தார்கள்.

கலாமணி கல்வியியல் துறைசார்ந்து கொண்டிருந்த ஆளுமைக்கு சமமான ஆளுமையை கலை இலக்கியத் துறையிலும் கொண்டிருந்தார். பரம்பரை பரம்பரையாக தனது தந்தை வழி கற்றுக் கொண்ட பாரம்பரிய இசை நாடக வடிவங்களில் தனது அற்புதமான குரல் வண்ணத்தாலும் நடிப்பாற்றலாலும் தடங்களைப் பதித்தவர். தனக்குப் பின்னரும் அக் கலைதொடரவேண்டும் என்பதற்காகத் தன் பிள்ளைகள், உறவுக்கார இளையவர்கள், பேரப்பிள்ளைகள் என மூன்று தலைமுறையினரை அத் தடத்திலே ஆற்றுப்படுத்தியவர்.

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் இணைவோடு நமது தேசத்தில் பலமேடைகளில் பூதத்தம்பியாகவும் சத்தியவானாகவும் அரிச்சந்திரனாகவும் தோன்றி கலை வளர்த்த பெருமகன்.

கல்வி உளவியலிலே ஆழமான புலமைத்துவம் கொண்டஅவர் இலகுவாகப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் அதனைக் கற்பிக்கும் திறனையும் கொண்டிருந்தார். தனது மூத்த மகனையும் உளவியல் பட்டதாரி ஆக்கவேண்டும் எனும் முனைப்போடு இருந்து அதில் வெற்றியும் கண்டார். அவரது மூன்று மகன்மாரும் ஏதோ ஒரு வகையில் ஆற்றலின் வடிவாகக் கலாமணியை நமக்குள் இன்றும் வாழச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

பதிப்பாசிரியர்களாக கலைஞர்களாக விரிவுரையாளர்களாக அவர்கள் தம் தந்தையின் கடமைகளைத் தொடர்வது பெருமைக்குரியது. அதுபோன்று கலாமணி அவர்களது குடும்பத்தை ஒரு ஆசிரியத்துவக் குடும்பமாகவே நான் பார்க்கின்றேன். அவரது மனைவி, சகோதரி எனத் தொடரும் ஆசிரியத்துவ பாரம்பரியத்தை இன்றும் அவரது மருமகள்கள் இருவரும் தொடர்வது அவரது பிறவிப்பயனின் பெரும்பேறு. அவரது இரண்டாவது மருமகள் லக்சனா பல்கலைக்கழகத்தில் எனது மாணவி. அவர் பேசும்போதுசொல்வார் அமரர் கலாமணியை தான் மாமா என அழைப்பதில்லை அப்பா என்று அழைப்பதாகவே சொல்வார். பெண் பிள்ளைகள் இல்லாத குறையை தன் வீட்டுக்கு வந்த மருமக்களை பிள்ளைகளாகப் பாவித்து தீர்த்துக் கொண்ட பரிவு மிக்கவர் அவர்.

அவர் கலைச்சுமை, கல்விச் சுமை என இரு சுமைகளைத் தாங்கிய மிக மென்மையான மனிதர் என்பதால் அவரது இதயம் சற்றுப் பலவீனப்பட்டு அதற்காக சிகிச்சை பெற்றார். ஆனாலும் நோய் நிலமைகள் தனது வினைத்திறனை வெற்றி கொள்ளாதிருக்கத்தக்க வகையில் திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் வாழ்வின் கடைசிக் கணம் வரை தான் வரித்துக் கொண்ட கல்விப் பணியையும் கலைப்பணியையும் ஆற்றியவர். எதிர்பாராத கணத்தில் அவர் இறப்பு நிகழ்ந்திருக்கின்றது. இறப்புக்கு முன்னைய நாளிலும் தனது ஆசிரிய, மாணவர்களுக்கான இணையவழி விரிவுரைகள் ஆற்றினார் என்பது அறிந்து அவரது அர்பணிப்புமிக்க காலத்தால் கௌரவப்படுத்தப்பட்ட அவரது வாழ்வின் செம்மையை நினைந்து போற்றுகின்றேன்.

கலாநிதி கலாமணி எனும் கல்வியியலாளன், கலைஞன், நல்லநண்பன், இனிய ஆத்மா இன்று நம்முடன் இல்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கடினமாக இருந்தாலும் இயற்கையின் நியதிகளை எவரும் வெல்ல முடியாது என்பது உணர்ந்து தேறுவோம்.

அவரது பிரிவால் துயருறும் அவரது மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உறவினர்கள் அனைவரும் மனம் தேற இயற்கை எனும் பெரும் சத்தி வல்லமையை கொடுக்கட்டும்.

அவரது ஆத்மா அவர் தினமும் துதிக்கும் இறைநிழலில் அமைதிபெற எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**பேராசிரியர். சிறிசற்குணராஜா,**
**துணைவேந்தர் - கணிதப் பேராசிரியர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 427





லாமா? அல்லது காஞ்சிக்குப் போகலாமா?"

என்னுடைய உண்மையான கருத்தைச் சொல்லட்டுமா? இளவரசர் அனுமதித்தால் சொல்கிறேன்.

முக்கியமாக, பெரிய ராஜாங்க விடயங்களைப் பற்றிப் பேச்சுக்கள் நடக்கும் இடத்தில் அந்த விரதத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வரச் சொல்லியிருக்கிறார்."

குருவின் வாக்கை நன்றாக நிறைவேற்றுகிறாய். நாங்களே இப்போது கேட்பதனால் சொல். உன்னுடைய யோசனை என்ன?"

எதைப் பற்றி என் யோசனையைக் கேட்கிறீர்கள் சேனாதிபதி?

இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்த விடயமாகத்தான். இளவரசர் இப்போது என்ன செய்வது உசிதம்? இலங்கையிலேயே இருக்க

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அருள்மொழிவர்மர் ஆழ்வார்க்கடியானை ஏறிட்டுப் பார்த்து, "சொல் திருமலை, தாராளமாய் மனத்தை விட்டுச்சொல்!" என்று தைரியப்படுத்தினார்.

"இந்த இலங்கைத் தீவிலேயே மிகக் கடுமையான கட்டுக் காவல் உள்ள சிறைச்சாலை எது உண்டோ, அதைக் கண்டுபிடித்து அதற்குள்ளே இளவரசரை அடைத்துப் போடவேண்டும்! வெளியில் பலமான காவலும் போடவேண்டும்!"

"இது என்ன உளறல்?" என்றார் சேனாதிபதி.

"விளையாட இதுதானா சமயம்?" என்றான் பார்த்திபேந்திரன்.

"நான் உளறவும் இல்லை விளையாடவும் இல்லை. மனத்தில் உள்ளதைச் சொன்னேன். நேற்று இரவு இளவரசர் அநுராதபுரத்து வீதிகளின் வழியாக வந்து கொண்டிருந்தார். அவர் தலைமீது ஒரு வீட்டின் முன் முகப்பு இடிந்து விழுந்தது. பிறகு ஒரு வீட்டில் நாங்கள் படுத்திருந்தோம். நல்ல வேளையாக ஒரு காரியத்தின் பொருட்டு எழுந்து போய் விட்டோம். சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வீடு தீப்பற்றி எரிந்தது. இவையெல்லாம் உண்மையா இல்லையா என்று இளவரசரையே கேளுங்கள்!

இருவரும் இளவரசரை நோக்கினார்கள். அவருடைய முக பாவம் ஆழ்வார்க்கடியானுடைய கூற்றை உறுதிப்படுத்தியது.

இந்த அபாயங்கள் எல்லாம் யாருக்காக நேர்ந்தவையென்று கேளுங்கள். என்னையோ அல்லது வந்தியத் தேவனையோ கொல்லுவதற்காக யாராவது வீட்டைக் கொளுத்துவார்களா?"

பார்த்திபேந்திரன் உடனே துள்ளிக் குதித்து இளவரசரைக் கொல்லுவதற்குத்தான் யாரோ முயற்சி செய்தார்கள். இதனால் இளவரசர் என்னுடன் காஞ்சிக்கு வர வேண்டிய அவசியம் உறுதிப்படுகிறது! என்றான்.

கூடவே கூடாது! தங்களுடன் இளவரசரை அனுப்புவதைக் காட்டிலும் பழுவேட்டரையர்களிடமே பிடித்துக் கொடுத்துவிடலாம் என்றான் ஆழ்வார்க்கடியான்.

"வைஷ்ணவனே! என்ன சொன்னாய்!" என்று பார்த்திபேந்திரன் கத்தியை உருவினான்.

சேனாதிபதி அவனைக் கையமர்த்தி, திருமலை! ஏன் அவ்விதம் சொல்லுகிறாய்? பார்த்திபேந்திர பல்லவர் சோழ குலத்தின் அருந்துணைவர் என்று உனக்குத் தெரியாதா?" என்று கேட்டார்.

"தெரியும், சேனாதிபதி, தெரியும்! சிநேகம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா?"

"பார்த்திபேந்திரர் சிநேகத்துக்காகவே உயிரையும் கொடுக்கக் கூடியவர் என்பதை அறிவேன், திருமலை!"

"அதுவும் இருக்கலாம். ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு மறுமொழி கூறச் சொல்லுங்கள். நாங்கள் நேற்றுமுன்தினம் மாலை தம்புள்ளைக்கு அருகில் போய்க் கொண்டிருந்தபோது இவருடன் இரண்டு பேர் வருவதைப் பார்த்தோம்! அந்த மனிதர்கள் யார்? இப்பொழுது அவர்கள் எங்கே என்று இவரைக் கேட்டுச் சொல்லுங்கள்."

(தொடரும்...)


---



# சிறுவர் அரங்கம்

## நண்பர்கள் கண்ட கனவு

(நேற்றைய தொடர்ச்சி)



அப்போது அந்த மலையில் ஒரு குகையிலிருந்து பயங்கர ராட்சதன் ஒருவன் உறுமிக் கொண்டிருப்பதை கண்ட என் நண்பர் பயந்து, வந்த வழியே திரும்பி ஓடி மறுபடியும் நான்கு பாதைகள் கூடும் இடத்தை அடைந்தார்.

இம்முறை அவர் நான்காவது பாதையில் சென்றார். அவர் கொஞ்ச தூரம் சென்றதும் தன் பின்னால் ராட்சதன் வருவது கண்டு பயந்து வேகமாக ஓடினார்.

அவர் ஒரு பாறையின் விளிம்பை அடைந்து விட்டார். அங்கிருந்து போக வழியில்லை. பாறையின் கீழ்வெகு ஆழத்தில் தான் நிலப்பரப்பு தெரிந்தது. அவர் ராட்சதனுக்கு பயந்து நின்றபோது கால்கள் நடுங்க பாறையிலிருந்து தவறி கீழே படுபாதாளப் பள்ளத்தில் விழுந்து விட்டார்.

அமைச்சர் தம் நண்பர் கண்ட இந்தக் கனவைக் கூறி, "பார்த்தீர்களா எவ்வளவு பயங்கரமான கனவு என்று. இதய நோயாளியான என் நண்பர் இந்தக் கனவைக் கண்டு முடித்ததும் கண் விழித்தார். மறுகணமே அவரது இதயத் துடிப்பு நின்றது. அவர் இறந்து போய்விட்டார்," என்றார்.

அப்போது இருவரில் ஒருவர் பயந்து போய் மெதுவாய்த் தாழ்ந்த குரலில்" கனவில் காணும் காட்சிகள் கூட மனிதனின் உடல் நலனை பாதிக்கின்றன. தங்களது நண்பர் நான்கு முறைகளில் பயந்து ஓடி இருக்கிறார்.

அந்தப் பயம் அவரைப் பெரிதும் பாதித்திருக்கிறது. கண் விழித்ததும் இதய நோயாளியான அவர் பயத்தால் இதயம் தாக்கப்பட்டு உயிரை இழந்திருக்க வேண்டும். உங்களது நண்பரின் பிரிவால் உங்களுக்குப் பெரும் துயரமே ஏற்பட்டுள்ளது." என்றான்.

அதைக் கேட்டபின் அமைச்சர் மற்றவரை பார்க்கவே அவர் சிரித்தவாறே, "ஆகா! என்ன அருமையான கட்டுக்கதை," என்றான்.

அமைச்சரும், கட்டுக் கதையா? ஏன் அப்படிக் கூறுகிறாய்?" என்று சற்று கோபப்பட்டவர் போலக் கேட்டார்.

"தங்கள் நண்பர் இந்த பயங்கரக் கனவைக் கண்டதும் உடனே கண் விழித்தார். என்றும் மறுகணமே அவரது இதயத்துடிப்பு நிற்கவே, அவர் இறந்துவிட்டார் என்றும் கூறினீர்கள். நீங்களோ உங்கள் நண்பரே இந்தக் கனவை உங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள் அது எப்படி முடியும். அவர் தான் கனவைக் கண்டு கண் விழித்ததும் இறந்து போய்விட்டாரே. அதனால் அவர் எப்படி இந்தக் கனவைத் தாமே உங்களிடம் சொல்லி இருக்க முடியும். முடியவே முடியாது. அதனால்தான் இது கட்டுக்கதை என்றேன்," என்றான்.

அமைச்சர் இரண்டாவது நபரை பாராட்டி அவனையே மன்னனின் அந்தரங்க ஆலோசகனாகத் தேர்ந்தெடுத்தார். (முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.

~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடி தலையிட வேண்டும்

சிவபூமி எனப் போற்றப்பட்ட ஈழத்திருநாட்டில் சைவ சமயத்தை அழிப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று, குருந்தூர்மலை, வெடுக்குநாறி மலை என உதாரணப்படுத்த முடியும்.

உண்மையில் தமிழர் தாயகத்தில் உள்ள சைவாலயங்களை ஆக்கிரமிக்கின்ற நடவடிக்கைகளைச் செய்வதில், சிங்களப் பேரினவாதம் ஆரம்பத்தில் தயக்கம் கொண்டிருந்தது.

ஆனால் என்று திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு தள்ளிவிழுத்தப்பட்டு நந்திக் கொடி சப்பாத்துக் காலால் உழக்கப்பட்டதோ அன்று சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்திலுள்ள சிவாலயங்களை ஆக்கிரமிக்கலாம் என முடிவு கட்டியது.

பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தின் நுழைவாயில் வளைவு உடைக்கப்படுவதைத் தடுக்க முடியாத நிலை சைவ சமயத்தில் இருந்த போது, தமிழர் தாயகத்திலுள்ள சிவாலயங்களை ஆக்கிரமிப்பது சுலபம் என்ற செய்தியும் சிங்களப் பேரினவாதத்துக்குத் தெரிந்து போனது.

தவிர, திருக்கேதீச்சரத்தில் நந்திக் கொடியை சப்பாத்துக்காலால் உழக்கிய சம்பவம் ஆகா! இனி தமிழர்கள் சமயத்தால் பிரிந்து போயினர் என்ற தகவலும் சிங்களப் பேரினவாதத்தை உசார்ப்படுத்தியது.

என்ன செய்வது ஒரு காலத்தில் தமிழர்கள் என்றால் அவர்களிடம் சமய பேதம் இல்லை என்ற நிலைமை இருந்தது.

எனினும் மன்னார் திருக்கேதீச்சரத்தில் நுழைவாயில் வளைவை உடைத்து எறிந்ததோடு; அந்த நிலைமையும் தகர்ந்து போனது என்பது நிதர்சனமான உண்மை.

இதற்கும் மேலாக, சரி ஏதோ நடந்தாயிற்று. இனி மேல் இத்தகு துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நடக்கக்கூடாது. உரிய இடத்தில் வளைவை மீளவும் நிரந்தரமாக அமைத்து எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என தமிழ் அரசியல் தரப்புகள் எவையும் நினைக்கவும் இல்லை.

தவிர, குறித்த சம்பவத்தை தமிழ் அரசியல்வாதிகள் கண்டிக்கவும் இல்லை.

இங்குதான் சைவம் பலயீனமுற்றுள்ளதென்ற உண்மை உறுதி செய்யப்படுகிறது.

இதிலிருந்து சன்னதம் கொண்ட சிங்களப் பேரினவாதம் வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிசிவனாலயத்தில் சிவராத்திரி நடப்பதைத் தடுத்து நிறுத்தி, பூசைப்பொருட்களை சப்பாத்துக் காலால் உழக்கி வெறியாட்டம் ஆடியுள்ளது.

இனி இந்த வெறியாட்டத்தை முற்றாக நிறுத்துவதாக இருந்தால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதுவிடயத்தில் தலையிட வேண்டும்.

அவரின் தலையீட்டை ஒட்டுமொத்த சைவ மக்களும் முன்வைக்க வேண்டும்.

இதைவிட இலங்கையில் சைவ சமயத்தைக் காப்பாற்ற வேறு உபாயம் எதுவுமில்லை.

# வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுரிமை மீறப்பட்டிருப்பது கண்டனத்துக்குரியது

## யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றம்

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறிய செயலானது உலகிற்கு எமது நிலையினை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம், வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின பொலிஸ் அராஜகங்களை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் ஜோதியான சிவபெருமானுக்குரிய விரதங்களுள் தலையாய விரதமே மகா சிவராத்திரி. வருடத்தில் ஒரு முறை வரும் இவ் விரதமானது ராத்திரி வேளை நான்கு சாம பூசைகளை மேற்கொண்டு இரவு முழுவதும் சிவனடியார்கள் கண்விழித்து சிவபெருமானை பூஜித்து சிவசிந்தையில் வழிபாடு மேற்கொள்வது மரபாகும். இவ் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் படி பூசை வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிலையில் ஆலய பூசகர் கைது செய்யப்பட்டமையும், வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொதுமக்களை பலவந்தமாக அகற்றியதுடன் மாலை ஆறு மணியளவில் அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

சைவர்களின் வழிபாட்டு உரிமையினையும், சைவ விழுமியங்களையும், புனித சடங்குகளையும் அவமதிக்கும் சம்பவங்கள் தமிழர்களின் தொன்மையான புனித பூமியில் இடம் பெற்றிருக்கிறது. அதன் உச்சக்கட்டமாக வெகு தூரத்தில் இருந்து வந்து விரதமிருந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களது வழிபாடுகளை தடுத்தும், வழிபாட்டில் ஈடுபட்ட பெண்களை கழுத்தை பிடித்து இழுத்து வீசியதுடன், தவறேதும் செய்யாத சிவனடியார்கள் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாக கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டிடத்துக்குள் நுழைந்து பூசை மற்றும் படையல் பொருட்களையும் பொலிஸார் காலால் அப்புறப்படுத்தியதுடன், கோவிலில் நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தியது போன்ற பொலிஸாரது மிலேச்சத்தனமான செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

இவ் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயலானது உலகிற்கு எமது நிலையினை இவ் அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது. இவ்வகையில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேசுவரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனிதநேயமின்மை சம்பவங்களை மிக கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர்களை விடுவிக்கக்கோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம். இலங்கை பொலிசாரது அட்டூழியங்களையும், இலங்கை அரசின் இவ்வாறான செயலை இந்து மன்றமாக கண்டித்து நிற்கின்றோம் என்றுள்ளது.

(ம-7.10.33)

# படையினர் வசமுள்ள எஞ்சியுள்ள காணியும் அடுத்த சில மாதங்களுக்குள் விடுவிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை வெளியீடு

பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ள மக்களின் எஞ்சியுள்ள காணி நிலங்களும் அடுத்த சில மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதுகாப்பு தரப்பினரிடம் மட்டுமல்லாது வன ஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு திணைக்களத்தின் கீழுள்ள காணிகளும் விரைவில் விடுவிக்கப்படும் என்றார்.

யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக பாதுகாப்பு தரப்பினரது கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் ஒரு தொகுதி காணி நிலங்கள் உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்கும் நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கூறுகையில் முப்படையினரும் மக்களுக்காகத் தான் சேவை செய்கின்றனர் என இங்கு உரையாற்றிய யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே எனது கருத்து இதுவாகத்தான் இருந்தது. அதாவது பாதுகாப்பு தரப்பினர் எமது மக்கள் படையாக, மக்களுக்கான படையாக செயற்படுவர் என்றும் செயற்பட வேண்டும் என்ற கருத்தை நான் முன்வைத்திருந்திருக்கின்றேன்.

இதேநேரத்தில் எமது மக்களது இன்னும் பல காணிகள் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றன. நிச்சயமாக அந்தக் காணிகளும் விடுவிக்கப்படும். அதாவது காணி விடுவிப்பு என்கின்றபோது முப்படை மற்றும் பொலிஸார், வன ஜீவராசிகள் மற்றும் வனவிலங்கு திணைக்களத்தின் கீழுள்ள காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

இதேநேரம் ஜனாதிபதி தெளிவாக கூறியிருக்கின்றார். 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறு காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அதனடிப்படையில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி எடுக்கும் இந்த நடவடிக்கையில் முன்னேற்றங்களும் காணப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் இறுதிப்பகுதியில் அவ்வாறான காணிகள் விடுவிக்கப்படும் என்றும் நான் முழு நம்பிக்கையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

(ம-7.10.33)

# பனங்காமம் குளத்தின் கீழ் 57 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் பனங்காமம் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான பொதுக்கூட்டம் பனங்காமம் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

மாந்தை கிழக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஜே. வோல்டி சொய்சா தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் சி.விகிர்தன், வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வவுனிக்குளம் விவசாய போதனாசிரியர்கள், பனங்காமம் கமக்காரர் அமைப்பு மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர். சிறுபோக விவசாய ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் தொடர்ந்து இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையாக 57 ஏக்கரும் சிறுதானிய செய்கையாக 10 ஏக்கரும் செய்வதென தீர்மானிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

18

வடிவமாற்றம் நிகழ் வுற்றகாலத்தையும் அறியஇயலும். வடிவமாற்றம் மேற்கொள்ளப் பெற்றதற்குரிய காரணத்தையும்அறிந்து கொள்ளமுடியும். இத்தகு நிலையையே நாம் எழுத்துச் சீர்திருத்தம் என்று குறிப்பிடுகின்றோம்.

தமிழ்எழுத்துச்சீரமைப்பு என்பது தமிழ்மொழியில்உள்ள எழுத்துக்களின் வரிவடிவத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப் பட்டதும் தொடர்ந்து மேற்கொளளப்பட்டு வருவதுமான முயற்சிகளாகும். 21 ஆம்நூற்றாண்டில் கணனியில் தமிழ் பயன்பாடு அதிகரித்த பின்னர் மீண்டும் தமிழ் எழுத்துகளை சீர்திருத்த வேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ளன.

தமிழ் எழுத்துகளின் பழைய வடிவங்களைக் கோவில்களிலுள்ள கருங்கல் சுவர்களிலும், செப்பேடுகளிலும் காண முடிகிறது. கல்வெட்டுகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.செப்பேடுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன. கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை வட்டெழுத்து, தமிழெழுத்து என இரு வகையாகப் பிரிக்கலாம் என்று கூறியிருந்தேன்.

அதுபோல கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன என்றும் கூறியிருந்தேன். இதனைச் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி' (சிலம்பு 5:12) என்னும் தொடராலும் அறியலாம்.

ஓலைச்சுவடிகளிலும், கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர். ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும், பந்தி பிரித்தலும் கிடையாது.புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது. இதனால் படிப்பவர்கள் பெரிதும் துன்பம் அடைந்தனர். எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.

**தொல்காப்பியர் கால சீர்திருத்தம்**

தொல்காப்பியர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்து முறையில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை.மெய் எழுத்துக்கும், உயிர் மெய் எழுத்துக்கும் வேறுபாடுகள் இல்லாமல் இருந்தது. உதாரணமாக கக்கன் என்ற பெயரை அக்காலத்தில் ககசுன என்றே எழுதினர்.ககசுன என்று எழுதப்பட்ட பெயரை, தமிழை நன்கு அறிந்தவர்களால் மட்டுமே கக்கன் என்று படித்து புரிந்து கொள்ள முடிந்தது.

இதனை மேலும் புரிந்து கொள்ள தொல்காப்பியரின் பெயரையே உதாரணமாக எடுத்துக்கொள்வோம். தொல்காப்பியர் என்ற பெயரை அக்கால வரிவடிவில் எழுத முற்பட்டால் அவை தோலகாபபியர என்ற உச்சரிப்பையே தரும். இதனை மாற்ற வேண்டும் என்று விரும்பிய தொல்காப்பியர், மெய் எழுத்துக்களையும் குறில், நெடில் எழுத்துக்களையும் புரிந்து கொள்ள அவ்வெழுத்தின் மேல் புள்ளி வைக்கும் வழிமுறையை அறிமுகப்படுத்தினார்.

இதனால் "தோ" என்ற வரிவடிவின் மேல் புள்ளி வைத்தால் அது "தொ" என்றும் "ல" என்ற வரிவடிவின் மேல் புள்ளி வைத்தால் அது "ல்" என்றும் பொருள் தந்தது. ககசுன என்ற எழுத்தை கக்கன் என்று புள்ளி வைத்து எழுதும் போது முன்பை விட மிக எளிமையாக புரிந்து கொள்ள முடிந்தது.

**தொல்காப்பியம் பற்றி சில வரிகள்.......**

இன்று கிட்டும்தமிழ் நூல் களுள் மிகத் தொன்மையானது தொல்காப்பியம் என்னும்பேரிலக்கணம் ஆகும். தமிழ்மொழியின் பெருமையையும், தமிழ் மக்களின் அறிவு மேம்பாட்டையும் உலகறியச் செய்யும் நூல் இது. தொல் காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர் எனப்படுகிறார்.

பல பெரும்புலவர்களின் வரலாறு சரிவர அறியப்படாதவாறு இவர் வரலாறும் அறியப்படவில்லை. தொன்மையான காப்பியக்குடி என்னும் ஊரினர் என்பதால் இப்பெயர் பெற்றார் என்பர் ஒருசாரார். தஞ்சை மாவட்டத்தில் சீகாழிப்பகுதியில் உள்ளகாப்பியக்குடியை மேற்கோள் காட்டுவர் ஒருசாரார். காவிய கோத்திரத்தைச்சார்ந்த பிராமணராக இவரைக் கருதுவாரும்உண்டு.

தொன்மையான தமிழ் மரபுகளைக் காக்கும் நூலை இயற்றியமையால் இவ்வாறு பெயர் பெற்றதாகவும் கூறுவர். இவர் திரணதூமாக்கினியார் என்ற இயற்பெயருடையார் என்றும் சமதக்கினிமா முனிவரின் மகன் என்றும் நச்சினார்க்கினியர் கூறினார். இதற்கு எச்சான்றும் இல்லை. இவரைஅகத்தியரின் மாணாக்கருள் ஒருவர் என்பர். இக்கருத்திற்கு, இவர்நூலில் எந்தச் சான்றும் இல்லை.

தொல்காப்பியரின்காலம் பற்றி அறிஞர்களிடையே பலகருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. மிகப்பலர் இவர்கி.மு. 5 அல்லது 3ஆம் நூற்றாண்டுக்குரியவர்என ஒப்புகின்றனர். பேராசிரியர்ச.வையாபுரிப்பிள்ளை போன்றசிலர், இவர் கி.பி.5ஆம் நூற்றாண்டினர் என்பர்.

சூத்திரயாப்பில்அமைந்த தொல்காப்பியம் 1610 சூத்திரங்கள் அடங்கியது. இதற்குப்பனம் பாரனார் எனபார் எழுதிய சிறப்புப்பாயிரம் உள்ளது. தொல்காப்பியம் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில், அதங்கோட்டு ஆசான் முன்னிலையில் அரங்கேறியதாக இவர் கூறியுள்ளார். மேலும், தொல்காப்பியர்தமக்கு முன் தோன்றிய நூல்கள்பலவற்றையும் ஆய்ந்து வழக்கு, செய்யுள் ஆகிய இரண்டையும்தழுவிநூல் செய்தார் என்கின்றார். மேலும் ஆசிரியர் ஐந்திரத்தில் பெரும்பயிற்சியுள்ளவர் என்றும்கூறுகிறார். (ஐந்திரம் ஸ்ரீ ஒருவடமொழி இலக்கணநூல்).

தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்என மூன்று பெரும் பிரிவுகள்உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்கள் அமைந்துள்ளன.

தமிழ்மொழியில் உள்ளசொற்களில்பயின்று வரும் எழுத்துக்களையும் அதன்வகைகளையும் கூறுவது எழுத்ததிகாரம். எழுத்ததிகாரத்தில் தமிழ் எழுத்துகளாகிய உயிர்பன்னிரண்டும் மெய்பதினெட்டுமாகிய முப்பதும், குறில் நெடில்என்றும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்றும் பாகுபடுத்தப்படும் செய்திகள் இடம் பெறுகின்றன. இவற்றுள் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வருபவை இன்னவை என்பதும் விளக்கப்பட்டுள்ளன.

சொல்லப்படும் சொற்களின் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் வாக்கியங்களாக அமைவதையும் சொல்லின்வகைகளையும் கூறுவது சொல்அதிகாரம். சொல்லதிகாரத்தில்தமிழ் இலக்கணத்தில் சிறப்பாக அமைந்த கூறுகளுள் திணைப்பாகுபாடும் ஒன்று. உயர்திணைஅஃறிணைஎன்ற அடிப்படையிலே பெயர்கள் தோன்றுவதனை விளக்கி, இருதிணைக்கும்உரியஐந்துபால்களையும், அவற்றுக்குஉரியபெயர், வினை ஆகியவற்றின் ஈறுகளையும் விளக்குகின்றார்.


தமிழ்நூல்கள் சொல்லும் பொருளையும் சொல்லும் பாங்கினையும் கூறுவதுபொருளதிகாரம்.

**வீரமா முனிவர் சீர்திருத்தம்**

மெய்யெழுத்துப் போலவே எ, ஒ என்னும் குறில் எழுத்துகள் இரண்டும் புள்ளி பெறும் என எழுத்து வரிவடிவங்களைப் பற்றி இலக்கண நூல்களான தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடுகின்றன.

இதனை வீரமாமுனிவர் சீர்திருத்தினார். அவர் செய்த திருத்தங்கள் கீழே தரப்படுகின்றன.

**தமிழி எழுத்தில் தொல்காப்பியரின் பெயர் புள்ளியிடாமல்**




**தமிழி எழுத்தில் தொல்காப்பியரின் பெயர் புள்ளியிட்டபின்**




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமோனியா...

மாக வைத்தியசாலையில் சில தினங்களுக்கு முன்னர் சிகிச்சை பெற்ற அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வீட்டில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்று பரிசோதனையில் நிமோனியா தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10,60)

## பழைய விடயங்...

ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

குருநாகல் குலியாபிடி நகர சபை வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

பழைய விடயங்களை மறந்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட அனைவரும் எங்களுடன் இணைந்து கொள்ள முன்வர வேண்டும்.

நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீண்டும் மீட்பதற்கு 5 வருடங்கள் வரை செல்லும் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால் குறுகிய காலத்தில் எங்களால் முடிந்திருக்கிறது எனவும் தெரிவித்தார்.

கஷ்டமான காலத்திலேயே மக்கள் தற்போது இருந்து வருகின்றனர். அதனால் குறுகிய அரசியல் பிரச்சினைகளை மறந்து நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல அனைவரும் முன்வர வேண்டும் என்ற செய்தியை தெரிவிப்பதற்கே இந்த இடத்துக்கு வந்தேன். வங்குரோத்து நிலையில் இருந்த நாடு தற்போது அதில் இருந்து மீள ஆரம்பித்துள்ளது என்றார். (ம-7,10)

## அதிக வெப்பம்...

எது.

அதன்படி மேல், வடமேல், தென், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை, இரத்தினபுரி மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளில் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7,10)

## ஐ.எம்.எப்...

பின் தலைவர் இரா.சம்பந்தன் இதில் கலந்து கொள்ளவுள்ளதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலுக்காக எதிர்க்கட்சிகளுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10)

## படையினரின்...

ஜனாதிபதி செயலணியின் சிரேஸ்ட அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சாந்தன விக்கிரமசிங்க, ஜனாதிபதியின் வடக்கு மாகாண அபிவிருத்தி செயலணியின் செயலாளர் இளங்கோவன், யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் நளாயினி, கிளிநொச்சி மாவட்ட உதவி அரசாங்க அதிபர் முரளிதரன், நெடுந்தீவு பிரதேச செயலர் அதிபர் காணி ஆணையாளர் ..., வடக்கு பிரதேச செயலர் மற்றும் காணி உரிமையாளர்கள் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 70 ஏக்கர் காணி நிலங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 40 ஏக்கர் காணி நிலங்களும் பாதுகாப்புத் தரப்பினரால் விடுவிக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது.

காணிகளின் உரிமங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி செயலணியின் சிரேஷ்ட அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க ஆகியோர் வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## வெடுக்குநாறி...

ஏற்பாட்டில் இக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இதில் அனைத்து தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது. (ம-7,10)

## சரண...

அவர் நேற்று அனுப்பி வைத்த வாராந்த கேள்வி பதிலில் இதனை தெரிவித்திருந்தார்.

அந்த கேள்வி-பதிலின் விபரம் வருமாறு,

**கேள்வி:-** வெளிநாட்டு உள்நாட்டு சதியின் விளைவே தாம் பதவியிலிருந்து நீங்கியமை என்று முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறுகின்றாரே! உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** துஸ்டர்களைக் கண்டால் தூர விலகுவது நாம் காலம் காலமாக செய்து வரும் ஒரு செய்கையாகும். போர்க் காலத்தின் போதும் அரசியலில் ஈடுபட்ட காலத்தின்போதும் கோட்டாபய துஸ்டனாகவே வாழ்ந்து வந்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டபோது, இராணுவச் சிங்கள நண்பர்களுடன் எம்மவர் சிலர் பேச நேர்ந்தது. அவர்கள் கூறிய கூற்று அந்த கால கட்டத்தின் பாரிய எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் வெள்ளைக் கொடிகளைக் கையில் ஏந்தி சரணடைந்த தமிழ் மக்களை என்ன செய்ய வேண்டும் என்று முல்லைத்தீவு படையணியினர் வினவிய போது பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய, சற்றும் சிந்தியாது "அவர்கள் யாவரையும் சுட்டுக் கொன்று விடுங்கள் என்று கட்டளையிட்டார்" என்று அந்த இராணுவ அதிகாரிகள் கூறினர்.

இராணுவத்தினர் கைவசம் அன்று இருந்த பல இடங்களில் இன்று இறந்தவர்களின் மனித எலும்புகளும் எலும்புக் கூடுகளும் நிலத்திலிருந்து வெளிவருகின்றன. உண்மையான சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற்றால் சரணாகதி அடைந்தவர்கள் எவ்வாறு, யாரின் கட்டளைக்கமைய காணாமல் போனார்கள் என்ற விடயம் வெளிவந்து விடும்.

தமது வீழ்ச்சிக்குத் தமிழர்களையும் முஸ்லிம் மக்களையும் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டும் கோட்டாபய 'அரகலய' வில் பங்குபற்றியோரில் 99 சதவிகித மானோர் சிங்கள இளைஞர்களே என்பதை மறந்துவிடக்கூடாது என்றார். (ம-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1445
M 27 42 46 60 M
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Double Chance 15418

மஹஜன சம்பத
திகதி 2024/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 5415
O 3 0 3 2 4 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1763
K 24 05 14 65 71
36496

லக்கி 7 VIP
திகதி 2024.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 0241
J 1 9 1 4 4 0 J
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3657
சீட்டிழுப்பு திகதி 10.03.2024
Y 05 16 51 62
Y 16984
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 0724
தனுசு 39 40 47 60 தனுசு
30708 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
10.03.2024 வெற்றி வாரம் 123 வர்ணம் பழுப்பு
U 3 2 4 0 5 3 W
30,837,068.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2389 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 10.03.2024 தினம் ஞாயிறு
21 45 57 74 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,370,039.20
DLB

சனிதா
திகதி 2024.03.10 வெற்றி வாரம் 4550 வர்ணம் இளஞ்சிவப்பு
39 43 48 66 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,505,953.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 452
சீட்டிழுப்பு திகதி 2024.03.10 கபிலம்
02 48 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,623,600/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4101 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.03.10 தினம் ஞாயிற்றுக்கிழமை
30 41 45 55 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 10,620,092.80
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 07 17 23 59 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 510,982,130.20
1565 மஞ்சள் 10.03.2024 ஞாயிறு
DLB தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2215
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,744,470.40
சீட்டிழுப்பு திகதி: 2024.03.10
ADA KOTIPATHI
32 53 63 69 B
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-8509)

076 825 7716 (ஆகாஸ்)



## வேலையாட்கள் தேவை

அலுவலகம் ஒன்றில் பணியாற்ற கணனி அறிவு மற்றும் ஆங்கிலம் கதைக்க தெரிந்த பெண் பிள்ளை தேவை. (C-8508)

Hybrid international hub(pvt) ltd Jaffna
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
077 815 5920, 021 222 1265


# வெடுக்குநாறியில் கைது செய்யப்பட்டவர்கள்
# சட்டவைத்திய அதிகாரியிடம்
## பரிசோதனைக்கு அழைத்து செல்லப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்டவர்களிடம் காயங்கள் காணப்படுவதாகவும் கைது செய்யப்பட்ட 8 பேர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த 8 பேரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு சென்று முன்னிலைப்படுத்துமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அதற்கமைவாக நேற்று சட்ட வைத்திய அதிகாரியிடம் அழைத்து செல்லப்பட்டனர்.

நேற்று விடுமுறை தினம் என்பதால் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இதனால் வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்கான மாற்று ஆடைகள் வழங்குவதற்கு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. எனினும் சிறைக்காவலர்கள் அதற்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை. இதனால் கடந்த இரு தினங்களாக அவர்கள் கைது செய்யப்படும் போது அணிந்திருந்த ஆடைகளே அணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,250)


## Canada Work Visa

General Motors Company க்கு
பொது உதவியாளர் (General helper)
உடன் தேவை.
மேலும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Appointment only can meet
VISA CONSULTANT
070 375 0002 (033)



## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (033)
Lanka Cargo Worldwide Express
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 038 5584


# புதுக்குடியிருப்பில் கஞ்சாவுடன்
# இராணுவ அதிகாரியும்
# இளைஞனும் கைது

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு உடையார்கட்டு பகுதியில் கேரள கஞ்சாவுடன் இராணுவ அதிகாரி மற்றும் இளைஞர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதோடு, இவர்களிடமிருந்த 10 கிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தேராவில் தேக்கங்காடு இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினை சேர்ந்த 40 வயதுடைய சார்ஜன்ட் மேஜரையும், உடையார்கட்டு தெற்கினை சேர்ந்த 19 வயதுடைய இளைஞரையுமே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் நிறுத்திய போது இருவரும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)


## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும்
அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும்
இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-
வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777 (C-8510)



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8510)



## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்


Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
தொடர்புகளுக்கு
077 544 8503 (19118)



## விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்
தொடர்புகளுக்கு : (028)
074 17 37 684


# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி விநாயகமூர்த்தி

மட்டுவில் தெற்கு மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வைத்தியசாலை வீதி முழங்காவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விநாயகமூர்த்தி அவர்கள் 2024.03.08 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினாவதியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இளையதம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, தெய்வநாயகி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி, கமலநாதன், செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் சசிகலா (ஆசிரியர், கிளி/ கரியாலைநாகபடுவான் இல.02 அ.த.பா), உதயணன், விஜி(ஆசிரியர், யாழ் இந்து மகளிர் கல்லூரி), அமரர் சுரேஸ், வாசுகி(கிராம அலுவலர் - ஜெயந்திநகர்), அருளினி(அதிபர், கிளி/வலைப்பாடு அ.த.க.பா), வினோ(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வராஜேஸ்வரன், ஜெயவதனி, ஆனந்தநடராஜன்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), நடேசமூர்த்தி(அதிபர், கிளி/பரந்தன் இந்து ம.வி), நகுலேஸ்வரன், ராதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கௌரிகா, குயின்சனா(லண்டன்), கௌசிகா(ஜேர்மன்), கௌதமன், கௌசிகன், அகல்யா(இலங்கை வங்கி), அபிநயா, அனோயா, கரிகாலன், சனோபா, சமராளன், ஓவியா, கலைஞன், ரஜீந்தன், சுரேன், செந்தூரன், சுஜிதா ஆகியோரின் அன்புப் பேரனும் மகிஷாந், குந்தவை, குற்றாலன், கஸ்வி ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (2024.03.11) இன்று திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் அன்புபுரம் இந்து மயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வைத்தியசாலை வீதி,
முழங்காவில்.
077 897 6927(மகள்) (029)
தகவல்:
குடும்பத்தினர்


## வீடு வளவும் நெற் காணியும் விற்பனைக்கு

சுழிபுரம் மத்தி பறாளை வீதியில் அமைந்துள்ள 6 1/2 விஸ்தீரணம் உள்ள வளவும் அதனுள் அமைந்த 3 அறைகள், கோல், சமையலறையும் தனிக் கிணறும் உடைய வீடும்
பறாளை வயல் வெளியில் அமைந்த 6 பரப்பு நெற்பரப்பு காணியும் விற்பனைக்குள்ளது.
077 744 8080, 077 227 1327, 077 617 6451 (024)



## காணி விற்பனைக்கு உண்டு

அச்சுவேலியில் 20 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- அச்சுவேலியில் இருந்து சன்னதி கோயில் பிரதான வீதி அருகாமை
- அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து 1.5Km தூரத்தில்
- பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில்
- தீத்தாம் பிள்ளையார் கோவில் இருந்து 100m தூரத்தில்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்பு : 076 739 0413, 074 027 5135 (032)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org